பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

PUBLIC LIBRARY

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 26 சனிக்கிழமை (10-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:228

# அமைதி முயற்சிகளில் இப்போதைக்கு முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு இல்லை

## புலிகள்-அரசு இடையேயான நம்பிக்கை சீர்குலையும் போக்கு மேலும் நீடிப்பு

கொழும்பு,ஜூலை10

**மாகாணசபைத் தேர்தல்கள் இன்று முடிவுற்றாலும், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பதற்கான அமைதி முயற்சிகளில் இப்போதைக்கு முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏதுமில்லை.**

**சமாதான நடவடிக்கைகள் முன்நகர்வதற்கான அறிகுறியே தென்படவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அதேசமயம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கை சீர்குலைவதற்கு வழிசெய்யும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறும் சூழ்நிலை உருவாகி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.**

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைபபு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருக்கும் பங்காளிக் கட்சிகள் இடையேயும் இது விடயத்தில் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாடு இல்லை; இழுபறி நீடிக்கின்றது.

எனினும், இன்றைய மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்க்கமான முடிவுகளை எடுப்பார். நேரடிப் பேச்சுக்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை தோன்றும் - அமைதி முயற்சிகள் முன்நகரத் தொடங்கும் - என்றெல்லாம் பலதரப்புகளிலும் பேச்சுக்கள் அடிபட்டன. பலத்த எதிர்பார்ப்பும் இருந்தது.

ஆனால், அவை ஒன்றும் இப்போதைக்குச் சரிப்பட்டுவராதென்பது தற்போது தெளிவாகத் தொடங்கியிருக்கின்றது.

மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவசியமான அடிப்படை அம்சங்கள் என்று புலிகள் வலியுறுத்தியுள்ள விடயங்களுக்கு ஆரம்பத்தில் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்து பச்சைக் கொடி காட்டிய இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்னர் அவற்றை செயற்படுத்த - அவற்றுக்கு எழுத்தில் ஒப்புதல் தெரிவிக்க - இணங்க மறுத்துவிட்டார்.

அதனால், சமாதான முயற்சிகள் முன்நக

(16ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டுத்துறை இணைப்பாளர் விபத்தில் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை10

காங்கேசன்துறை வீதியில் இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் படுகாயமடைந்தார்.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. (ஒ-4)

## தற்கொலைத் தாக்குதலை கண்டிக்கிறதாம் அமெரிக்கா

கொழும்பு,ஜூலை10

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நடைபெற்றுள்ள தற்கொலைக் குண்டுத்தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் மேற்படி குண்டுத்தாக்குதல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. ஆரையம்பதியில் நேற்று கிராம அலுவலர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஜூலை10

மட்டக்களப்பு மாவட்டம் கரடியனாறு பகுதியல் கிராம சேவையாளர் ஒருவர் நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் கிராம சேவையாளராகக் கடமையாற்றிவந்த குஞ்சுத்தம்பி - சிவராசா (வயது 44) என்ற இவர் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியான ஆரையம்பதியிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்டார்.

நேற்று மாலை 5.45 மணியளவில் இவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரைச் சுட்டுவிட்டுத்தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டது. சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை இடைவழியில் அவர் உயிரிழந்தார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆரையம்பதி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-4-9)

## மருத்துவபீட மாணவிக்கு தீர்வு வழங்க மூவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது

### இதனால் மாணவர் பகிஷ்கரிப்பு இடைநிறுத்தம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாக சுமுகத்தீர்வு காண மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இதனையடுத்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தை இன்றுமுதல் இடைநிறுத்துவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மாணவியின் பிரச்சினை தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக யாழ். பல்கலைக்கழக கணனிப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் கே.கந்தசாமியும் உறுப்பினர்களாக பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன், மருத்துவபீட கடற்றொழிலியல் துறைப் பேரா

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய தேர்தல் முடிந்த கையோடு தமிழர் மீதான கெடுபிடி அதிகரிக்கும்

### எச்சரிக்கின்றார் கொழும்பு எம்.பி. மகேஸ்வரன்

கொழும்பு,ஜூலை10

இன்று நடைபெறும் மாகாணசபைத் தேர்தலின்பின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும், கெடுபிடிகளும் அதிகரிக்கப்படும். மீண்டும் வீதித்தடைகளும், சோதனைச் சாவடிகளும் தோன்றும். தமிழர்கள் சுதந்திரமாக நடமாட முடியாதநிலை வரும். நேற்றுமுன்தினம் ஜே.வி.பியினரும் ஸ்ரீல.சு.கட்சியினரும் இரகசியமாகக்கூடி இதற்கான தீமானங்களை எடுத்துள்ளனர். எனவே, தமிழ் மக்கள் நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் நடத்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் இந்து விவகார அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமாலை மகேஸ்வரன் எம்.பியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தையைப் பணயம் வைத்து திருடியவர்கள் சிக்கினர்!

தென்மராட்சி,ஜூலை10

வடமராட்சி கப்புது பகுதியில் குழந்தையைப் பணயம் வைத்து வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பத்தினரிடம் பணம் மற்றும் பொருள்களைக் கடந்தவாரம் அபகரித்துச் சென்ற திருடர்களில் 7 பேரை நெல்லியடிப் பொலீஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் ஆவணங்கள் சிலவற்றை வீசிவிட்டுச் சென்றனர் என்றும் அந்த ஆவணங்களை எடுத்துப் பார்த்த பொதுமக்கள் கடவுச்சீட்டு உட்பட வெளிநாட்டுடன் தொடர்புடைய ஆவணங்களே

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைகளுக்கு வாக்களிப்பு இன்று

கொழும்பு,ஜூலை10

ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆறு மாகாணசபைகளுக்கும் தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்கள் ஆக 316பேர் மட்டுமே. ஆனால், போட்டியிடும் வேட்பாளர்களோ 4,134 பேர்.

வாக்களிக்கும் தகுதி உடையவர்கள் 95 லட்சத்து 81 ஆயிரத்து 331 பேர்.

23 அரசியல் கட்சிகளும், 35 சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

இந்த ஆறு மாகாணங்களிலும் மொத்தம் 7,663 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து 50 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

*(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)*

## மண்டைதீவுக்குச் செல்வதற்கு மாணவியருக்கு அனுமதி மறுப்பு

மண்டைதீவு,ஜூலை10

மண்டைதீவின் கடற்கரைப் பகுதிகளில் உள்ள முருகைக்கற் படைகளை பார்ப்பதற்கும் ஆய்வு செய்வதற்குமாக வேம்படி மகளிர் பாடசாலையின் உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவியர் மண்டைதீவுக்கு நேற்றுமுன்தினம் சென்றனர். ஆனால் அவர்கள் மண்டைதீவு சந்தியில் உள்ள காவலரணில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடற்கரை, கடல் வளம் மற்றும் பாறைகளின் தன்மை பற்றிக் கண்டறிவதற்காக, ஆசிரியர்களுடன் சென்ற மாணவிகள் படையினரின் பொதுசனத் தொடர்பு அதிகாரியின் முன் அனுமதி பெறப்படவில்லை என்று காரணம் காட்டியே உட்செல்ல அனுமதிக்கப்படவிலலை.

மண்டைதீவு செல்ல அனுமதிக்காக நீண்ட நேரம் காத்திருந்தபின் இவர்கள் மண்கும்பான் சாட்டிக் கடற்கரைக்குச் சென்று திரும்பினர் என்று பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, உயர் பாதுகாப்பு வலயமான மண்டைதீவின் பகுதிகளில் கரும்புலிகள் தினத்தன்று கரும்புலிகளின் படங்களும் சுவரொட்டிகளும் காணப்பட்டன என்றும், இதனைத் தொடர்ந்து அப்பகுதியின் கடற்படை அதிகாரிகள், கிராம சேவையாளர் சகிதம் வீடுவீடாகச் தேடுதல் நடத்தினர் என்றும் - தெரிவிக்கப்பட்டுகின்றது. (ஒ-88)

வடக்கு - கிழக்கு

## மனித உரிமைகள் செயலகம் நேற்று கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி,ஜூலை10

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கிளிநொச்சியில் நேற்று இயங்க ஆரம்பித்துள்ளது.

ஏ-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள இந்தச் செயலகத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்புரையாற்றினர்.

இந்தச் செயலகத்தை இயக்கும் குழவின் தலைவராக வண. ம்.எஸ்.கருணாகரன் செயற்படுவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில்

# தோட்டம் பார்க்கச் சென்றவர்கள் மிதிவெடிகளில் இருந்து அருந்தப்பு

## உடைமைகளின் அழிவு கண்டு பலர் கதறினர்

தென்மராட்சி,ஜூலை10-

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் உள்ள தென்னந்தோட்டங்களைப் பார்க்கச் சென்ற இரு கிராம அலுவலர்கள் மிதிவெடிகளில் சிக்காமல் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு மண் அணைக்கு அப்பால் உள்ள தென்னந்தோட்டங்களை பார்வையிட அவற்றின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுடன் மேற்படி இரு கிராம அலுவலர்களும் சென்றனர். அங்கு நடமாடிய வேளையில் வெளியே தெரியக்கூடிய வகையில் மிதிவெடிகள் ஆங்காங்கே காணப்பட்டன. இதனையடுத்து அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை எனக் கூறி அவர்கள் திருப்பி அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிராம அலுவலர்களான பொ.நவரத்தினராசா, வ.வேல்முருகு ஆகியோரே மிதிவெடியில் சிக்காமல் தப்பியவர்களாவர்.

இதேவேளை, தென்னந்தோட்டங்களைப் பார்வையிடச் சென்ற உரிமையாளர்கள் தமது தோட்டங்களின் நிலைகண்டு கலங்கிவிட்டனர் என்றும் -

அங்கு சென்று பார்வையிட்டவர்களில் சிலர் தமது தோட்டங்களில் உள்ள தென்னை மரங்கள் தறிக்கப்பட்டிருப்பதைக்கண்டும், வீடுகள் கற்குவியலாகவும், கூரைகள் அற்ற நிலையிலும் காணப்பட்டதைக் கண்டும் வாய் விட்டுக் கதறி அழுதனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதி மக்களுக்கு நிரந்தர வருமானத்தை வழங்கிய தென்னை வளம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் - ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் உள்ள இப்பிரிவில் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகளில் தற்போது நூற்றுக்கு உட்பட்ட தென்னை மரங்களே காணப்படுகின்றன என்றும் - அவற்றிலும் பெரும் பாலனாவை செவ்விளநீர் மரங்களெனவும் அங்கு சென்று திரும்பியவர்கள் கூறினர்.(ஒ-117)

## இரத்தினபுரியில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு,ஜூலை10


இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையினால் மண் சரிவு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நேற்றுக்காலை பெய்த 81 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியைத் தொடர்ந்து மண் சரிவுகளுக்கான சாதக நிலை அவதானிக்கப்படுவதாக மண்சரிவின் கண்காணிப்புக் குழுத் தலைவர் பண்டார தெரிவித்துள்ளார்.

எனவே, இந்நிலையைச் சமாளிக்கும் வகையில் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் கருணாரத்தின தெரிவித்தார்.

பத்திரிகைத் துறையில் நீண்டகாலம் மேன்மையான சேவை புரிந்துள்ள 5 மூத்த பத்திரிகையாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அவையின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களில் ஈழநாடு உட்பட நாட்டின் 12 பத்திரிகைகளில் சேவையாற்றிய அனுபவம் மிக்க பத்திரிகையாளர் எம்.முருகையாவுக்கு வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். நடராஜா பதக்கம் சூட்டுகிறார்.



யாழ். போதனா வைத்தியசாலையில்

# நோயாளியைப் பராமரித்தவருக்கு வார்ட்டில் வைத்து உளிக் குத்து

யாழ்ப்பாணம்,ஜூலை10

வைத்தியசாலையில் நோயாளி ஒருவரைப் பராமரித்தவர் வார்ட்டில் வைத்தே உளியினால் குத்தப்பட்டுக் கையில் காயமடைந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை அனுமதி வார்ட்டான 24ஆம் வார்ட்டில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா தங்கராசா (வயது44) என்பவரே காயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினமிரவு தங்கராசாவுக்கும் அவரது மைத்துனருக்கும் இடையில் தகராறு இடம்பெற்றதாகவும் -

அப்போது மைத்துனரான வீமன்குகராசா (வயது50) என்பவர் கீழே விழுந்ததில் தலையில் படுகாயமடைந்தார் என்றும் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்தவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தார். அவருடன் தகராற்றில் ஈடுபடுவதற்குக் காரணமாக இருந்தவர் என்று கூறப்படும் மைத்துனரான தங்கராசாவே அவரைப் பராமரிப்பதற்காக வார்ட்டிலும் கூடவிருந்தார்.

தந்தை காயமடைந்ததால் ஆத்திரமடைந்த குகராசாவின் மகன் விஷ்ணு(வயது19)என்பவர் உளியுடன் ஆஸ்பத்திரி வார்ட்டினுள் நுழைந்து தகப்பனைப் பராமரிக்க நின்ற தங்கராசாவை அந்த உளியால் குத்திக்காயப்படுத்தினார்.

குத்தியவர் உடனடியாகவே யாழ்.பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

காயமடைந்தவர் அதே வார்ட்டில் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-6-13-15)

## படைத்தரப்பு விளக்கம்

கடந்த 7ஆம் திகதி உதயன் பத்திரிகையில் "18 வயதிற்கு குறைந்தவர் இராணுவத்தில் இணைப்பு?" என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அனுப்பியுள்ள விளக்கம் வருமாறு:-

ராசே உபுல் குமார என்ற சிப்பாய் 1982.09.03ஆம் திகதி பிறந்தவர். அவர் 2002 பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி இராணுவத்தில் இணைந்தார். அப்போது அவருக்கு வயது 19 முடிவடைந்துள்ளது. மேற்படி இராணுவச் சிப்பாய் இராணுவத்திற்கு சேர்ந்தபோது அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடித ஆவணங்களை பரிசீலித்தபோது இந்தத் தகவல் ஊர்ஜிதப்படுத்தபட்டது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.-முகமாலை இடையே விரைவில் கடுகதி பஸ்சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை10

முகமாலை - யாழ்ப்பாணம் இடையேயான கடுகதி பஸ் சேவை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான முன் ஆயத்தங்கள் யாவும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த மூன்று நாள்களுக்கு முன்பிருந்தே மினிபஸ் சங்கம் முகமாலை - யாழ்ப்பாணம் இடையே கடுகதி சேவையை ஆரம்பித்துள்ளது தெரிந்ததே. இதற்கான ஒருவழிக்கட்டணமாக 30 ரூபா வசூலிக்கப்படுகிறது.

கடுகதி பஸ் சேவையில் இருக்கைகளுக்களவாகவே பயணிகள் அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-15)

# ரெலோ அலுவலகக் கட்டடம் குறித்து ஜூலை 22இல் ஒருமுக விளக்கம்

## வவுனியா நீதிமன்றம் உத்தரவு

வவனியா,ஜூலை10

வவுனியாவில் ரெலோ அமைப்பின் தலைமைக் காரியாலயம் இயங்குகின்ற வீட்டை மீண்டும் தன்னிடம் கையளிக்க உத்தரவிடுமாறு கோரி அந்த வீட்டின் உரிமையாளர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது ஒருமுக விளக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வவுனியா மாவட்ட நீதிபதி எம.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த விசாரணை தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெற்ற மூன்று வழக்குத் தவணைகளுக்கு எதிராளிகள் சமுகம் தராததை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு முதல் வீட்டின் உரிமையாளரின் அனுமதியின்றி ரெலோ இயக்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அங்கிருந்து செயற்பட்டுவருகின்றனர் என்றும் - அவர்களை வெளியேற்றி தமது காணி உரிமையினை பிரகடனப்படுத்தித் தருமாறு மேற்படி மனுவில் வீட்டின் உரிமையாளர் கேட்டுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பாக அழைப்பாணைகள் அனுப்பப்பட்டபோதிலும் ரெலோ இயக்கத்தின் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கடந்த மூன்று தவணைகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதை வழக்கு விசாரணையின் போது மனுதாரரான வீட்டின் உரிமையாளரின் சட்டத்தரணி நீதி மன்றுக்குச் சுட்டிகாட்டினார்.

எனவே, இந்த வழக்கில் ஒருதமுக விளக்கம் நடத்தி வீட்டைப் பெற்றுத் தருவதுடன், 1997 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான காலப் பகுதிக்கு மாதம் தலா 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடாகப் பெற்றுத் தரவேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

எதிர் மனுதார் நீதிமன்றில் ஆஜராகுவதற்கு தவணை வழங்குமாறு கடந்த வழக்குத் தவணையின் போது அவரது சட்டத்தரணி கோரியிருந்தார். எனினும், எதிர் மனுதாரர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது நீதிமன்றுக்கு வருகைதரவில்லை. அவரது சார்பிலான 'புரக்ஸி' எனப்படும் பதிலி பத்திரத்திலும் அவர் கையொப்பம் இடவில்லை. விசாரணையின் போதும் அந்த பத்திரம் இணைக்கப்படவில்லை. இதனையடுத்து இந்த வழக்கின் மீதான ஒருதலைப்பட்ச விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிக்கும் என வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(ஒ-164)

## மாகாண மட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் 2ஆம் நிலைப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம் 13ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வலைப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம், இறகுப் பந்தாட்டம் மற்றும் சதுரங்கம் ஆகிய போட்டிகளே நடைபெறவுள்ளன.

(ஒ-9)

## கலந்துரையாடல்

நீர்வேலி,ஜூலை1[illegible]

வலி.கிழக்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் சம்பந்தமாக சனசமூக நிலையங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நாளை காலை 9 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் உள்ள மாதர் சங்க மண்டபத்தில் நடத்தவுள்ளது.

(ஒ-110)

# கூரையில் மறைந்திருந்தவர் வீட்டுக்காரரிடம் பிடிபட்டார்

யாழ்ப்பாணம்,ஜூலை10

கச்சேரி நல்லூர் வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றின் கூரை மீது இரவு நேரம் ஏறி ஒளிந்திருந்து திருட முற்பட நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இவர் யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் இச்சம்வம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபரைப் பிடித்து விசாரித்தவேளை அவர் மறைத்து வைத்திருந்த மேற்சட்டைக்குள் இருந்து ஒரு சோடி காப்பு மீட்டகப்பட்டது.

மீசாலையைச் சேர்ந்த இந்நபரை விசாரித்த பொலீஸார் இது தொடாபாக யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த மற்றுமொருவரையும் கைதுசெய்தனர்.

(ஒ-30)

# வவுனியா வளாக மாணவருக்கு!

வவுனியா,ஜூலை10

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகுமென்று வளாகக் கல்விச் சபை அறிவித்துள்ளது.

மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் ஆகியோர் தனித் தனியே நடத்திய போராட்டங்களால் கடந்த இரு வாரங்களாக வவுனியா வளாகச் செயற்பாடுகள் முடங்கின.

இந்தப் பிரச்சினைகளுக்கு பேச்சுமூலம் தீர்வு காணப்பட்டதையடுத்து நேற்று முதல் உழியர்கள் பணிக்குத் திரும்பினர். இதனைத் தொடர்ந்தே எதிர்வரும் 19ஆம் திகதி இங்கு கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-164)

# கிளிநொச்சியில் நேற்றும் இன்றும் கல்வி குறித்த கலந்துரையாடல்

கல்வித்துறை சார்ந்த உயர் அதிகாரிகளுக்கான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழீழக் கல்விப் பிரிவின் முக்கிய பொறுப்பாளர்களும், வடக்கு - கிழக்கில் உள்ள கல்விசார் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தமிழர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும், எதிர்காலக் கல்வித் திட்டம் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் நேற்று ஆராயப்பட்டதாகவும் -

இந்தச் சந்திப்பு இன்றும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் -

கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-13)

ஹிங்குராகொட விகாரையில் நடந்த

# குண்டு வீச்சில் காயமுற்ற விகாராதிபதி நிலை மோசம்

கொழும்பு,ஜூலை10

ஹிங்குராகொடைக்கு அருகில் உள்ள தியாபுபுல பௌத்த விகாரை மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படுகாயமடைந்த அந்த விகாரையின் விகாராதிபதியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து செயற்கைமுறை சுவாசத்தில் அவர் வைக்கப்பட்டிருக்கின்றார்.

எண்பது வயதான இந்த விகாராதிபதி ஏற்கனவே சுகவீனமுற்று படுக்கையில் இருந்தவர் எனக் கூறப்படுகின்றது.

குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட காயங்கள் மற்றும் அதிர்ச்சி ஆகியவற்றால் மீளமுடியாத உடல் கோளாறில் அவர் சிக்கியுள்ளார் என கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டுத் தாக்குதலில் காயமடைந்த அவர் விரைந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

தொடர்ந்து அவரின் உடல் நிலைமை மோசமாக இருந்துவருகிறது.

கருணா குழுவினர் 14 பேர் பயங்கர ஆயுதங்களுடன் இந்த விகாரையில் பதுங்கியிருந்த சமயமே கடந்த திங்கட்கிழமை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

(க)

உதயன்

## நீதி நிலைநாட்டப்படுவது காட்டப்படவும் வேண்டும்

இந்த நாட்டின் பிரதம நீதியரசர் தொடர்பாகக் கிளம்பியிருக்கும் கதைகள் இப்போது பெரும் சர்ச்சையாக மாறியிருக்கின்றன. நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த விவகாரம் ஒன்றும் அதிக கரிசனைக்குரிய விடயம் அல்ல.

ஆனால், நீதித்துறை தொடர்பான சில முக்கிய - அடிப்படை - அம்சங்கள் இதில் தொடர்புபட்டிருப்பதால் இது கவனிக்கவேண்டிய விவகாரமாக மாறியிருக்கினறது.

பிரதம நீதியரசர் குறிப்பிடுவது போல அவருக்கும், அவரது பதவிநிலைக்கும், நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் பொலீஸ் தரப்பால் புனையப்பட்ட - சோடிக்கப்பட்ட - கதையாகவும் இது இருக்கலாம். அல்லது மாறாக, பொலீஸ் தரப்பில் முன்வைக்கப்படும் தகவலில் ஏதேனும் உண்மையும் கூட இருக்கலாம்.

பிரதம நீதியரசர் அச்சமயம் பயன்படுத்தியதாகக் கூறப்படும் காரின் - பொலீஸார் குறிப்பிடும் சம்பந்தப்பட்ட பெண்ணின் காரின் - வாகன இலக்கம் மேற்படி பொலீஸ் அதிகாரியின் குறிப்பில் பதியப்பட்டுள்ளது. ஆனால், அந்த இலக்கத்தில் இலங்கையில் வாகனம் எதுவும் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்பதும், சம்பந்தப்பட்ட இளம்பெண் வழங்கியதாகத் தெரிவித்து பொலீஸ் அதிகாரி பதிவுசெய்த - அந்த இளம்பெண்ணின் விலாசத்தைத் தேடியபோது அப்படி ஒரு முகவரியே உண்மையில் இல்லை என்பதும் தெரியவந்திருக்கின்றது.

எனவே, நாட்டின் நீதித்துறையின் மிக உயர்ந்த அதிகாரிக்கு எதிராக, நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்குப் பொறுப்பான பொலீஸாரால் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பாரதூரமான குற்றச்சாட்டு விசாரிக்கப்படவேண்டும்; நீதியான முறையில் - பக்கச்சார்பற்ற விதத்தில் - புலனாய்வு செய்யப்படவேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டுவதுபோல இந்த விடயத்தில் பிரதம நீதியரசர் கூறுவதுதான் உண்மை என்றால் அவருக்கு அபகீர்த்தி - அவதூறு - ஏற்படுத்தும் வகையில் சதிமுயற்சியில் ஈடுபட்ட பொலீஸாரின் செயல் பாரதூரமான குற்றமாகும். மாறாக, பொலீஸார் முன்வைத்த தகவல்கள் சரியானவை என்றால் இதுவிடயத்தில் பிரதம நீதியரசர் நடந்துகொண்ட விதம் அவரது பதவிக்குப் பொருத்தமற்றதாகிவிடும்.

இதற்கு அப்பாலும், இந்த விடயத்தில் முக்கிய அம்சம் ஒன்று பொதிந்துள்ளது. அதுதான் இப்போது கவனிக்கப்படவேண்டியதாகும்.

“உயர்நீதிமன்றத்தில் சில வழக்குகள் நிலுவையில் இருக்கையில், என்னை அகௌரவப்படுத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக இது (இந்த முயற்சி) இருக்கலாம் என்பதை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.” - என்று பிரதம நீதியரசர் தெரிவித்திருக்கின்றா.

ஆக, தமக்கு எதிரான இக்குற்றச்சாட்டுக்கும், உயர் நீதிமன்றத்தில் தமக்கு முன்னால் விசாரணையில் நிலுவையில் இருக்கும் சில வழக்குகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகக் கருதும் அவர், அதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அப்படி அவர் வெளிப்படுத்தியது தப்பல்ல. ஆனால், அப்படி ஒரு கருத்து அவரது மனதில்பட்டு, அதை அவர் வெளிப்படுத்திய பின்னர், அத்தகைய வழக்குகளில் தீர்ப்புச் சொல்லும் ஆயத்தில் ஒருவராக அவரும் இருப்பது நியாயமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

வழக்கு ஒன்றின் ஒரு தரப்பார் - அல்லது அந்த வழக்கோடு தொடர்புபட்டவர் - தன்னை முறையற்ற விதத்தில் அகௌரவப்படு..த முயன்றார் என்ற நிலைப்பாடு ஒரு நீதிபதியின் அடிமனதில் இருக்க, அந்த வழக்கை அந்த நீதிபதி விசாரிப்பது அடிப்படை நீதி ஆகுமா? அவர் பக்கச்சார்பான - தப்பபிப்பிராயமுடைய (Prejudice) -மனதுடன் வழக்கு விடயத்தை அனுகும் நிலை ஏற்படாதா?

ஏற்கனவே, தம்மையும் ஓர் எதிர்மனுதாரராகக் குறிப்பிடப்பட்டிருந்த வழக்கைத் தாமே விசாரிக்க முற்பட்டு, அந்த விசாரணையின்போது மனுதாரருக்கு ஓராண்டு காலம் சிறைத்தண்டனை விதித்து, அதன் மூலம் சர்வதேச ரீதியில் நீதித்துறை தொடர்பான விமர்சனத்துக்கும், சர்ச்சைக்கும் உள்ளானவர் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

எனவே, இப்போது அவருக்கு எதிராகப் பொலீஸ் தரப்பில் கூறப்படும் குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, அதையொட்டித் தாம் பகிரங்கப்படுத்திய கருத்துத் தொடர்பாக திட்டவட்டமான ஒரு நிலைப்பாடு எடுக்க வேண்டியவராகின்றார் அவர்.

தம்மை அகௌரவப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி விடயத்துடன் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் எந்தெந்த வழக்குகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என அவர் நினைத்தாரோ - கருதுகின்றாரோ - அந்தந்த வழக்குகளை விசாரிக்கும் ஆயங்களில் இருந்து அவர் ஒதுங்குவதுதான் நியாயம்; இயற்கை நீதி.

நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல; நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். (Justice not only be done, but also appear to be done) என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

# ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை சட்டவாதி இல்லாததால் தாமதம்

## 22 வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் தேக்கம்

யாழ்ப்பாணம்,ஜுலை10

சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு வழக்குகளை விசாரிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் சட்டமா அதிபர் சார்பில் சட்டவாதி ஒருவர் ஆஜராகாததே இதற்குக் காரணம் எனக் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் 1995 - 96ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் 48 பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 22 பேருடைய வழக்குகள் விசாரணைக்காக சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. அங்கு நிரந்தர மொழிபெயர்ப்பாளர் இல்லாமையினால் உடனடியாக அவ்வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மேற்கொண்ட முயற்சியினால் நீதிச் சேவை ஆணைக்குழு நிரந்தர மொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமித்தது. அத்துடன், இவ்விசாரணைகளைத் தொடர்ச்சியாகவும் விரைவாகவும் நடத்தி முடிக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

இவ்வழக்குகள் யாழ். மேல் நீதிமன்றத்திலிருந்து சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுப் பல மாதங்களாகியும் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் சட்டவாதி எவரும் நீதிமன்றில் இதுவரை ஆஜராகவில்லை. இதனால், இது தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாகப் பிற்போடப்படுகின்றன.

இதேவேளை, இவ்வழக்குகளுடன் தொடர்புடையவர்களுடைய பெற்றோர்கள தவணை தவறாது சமுகமளித்து மன விரக்தியுடன் திரும்பிச்செல்கின்றனர். இவர்களுக்காக ஆஜராகும் சட்டத்தரணியான றெமீடியஸ்"ம் ஒவ்வொரு தவணைக்கும் கொழும்பிலிருந்து வந்து திரும்பிச் செல்கின்றார். காணாமற்போனவர்களின் குடும்பங்களின் நிலைமையைக் கருத்திற்கொணடு சட்டமா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனப் பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

# சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளை சங்கத்தில் பதிவுசெய்யப்படுவது அவசியம்

## போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை10

பயணிகள் சேவையில் ஈடுபடுவது தொடர்பான பதிவுகளை மேற்கொண்ட முசசக்கரவண்டிகளே சேவையில் ஈடுடமுடியும். - இவ்வாறு தெரிவித்தார் யாழ். போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகரி சேனநாயக்க.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் அண்மைக்காலமாக வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்தவண்ணமுளளன. குறிப்பாக ஆள்கடத்தல், வழிப்பறித்திருட்டு, திட்டமிட்ட அடிதடிகள் என்பன அதிகரித்துள்ளன. இவ்வாறான அசம்பாவிதங்களுக்குப் பெரிதும் முச்சக்கர வண்டிகளேளே பயன்படுத்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

எனவே, இதுதொடர்பான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு வசதியாக முச்சக்கரவண்டி உரிமையாளாகள் முச்சக்கரவண்டி சங்கத்தில் தங்களது பெயர், விவரங்களைப் பதிவுசெய்து சங்கத்தினால வழங்கப்படும் அங்கத்துவ அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இதன் மூலம் அசௌகரியங்களைத் தடுத்துக்கொள்ளமுடியும் - என்றார் அவர்.

இந்த அறிவித்தலையேற்று உரிய கவனமெடுக்காதவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று - அவர் மேலும் கூறினார். (எ-13)

# உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜுலை10

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் நாடளாவிய ரீதியில் சுவரொட்டிப் போட்டியை நடத்தவுள்ளது.

“உயிர் வாழத் தேவையான ஓசோன்களை அழிக்கும் பதார்த்தங்களை நிறுத்துவோம்” என்னும் தொனிப்பொருளில் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பாடசாலை மாணவர்களும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களும் பங்குபற்றமுடியும்.

சுவரொட்டிகள் யாவும் 60x40cm தாள்களில் வரையப்பட்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், சுற்றாடல் குழு, இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கம் 120/10 விஜய மாவதத, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மட்டத்திலிருந்து போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே ஏழாயிரம் ஐயாயிரம், மூவாயிரம் எனப் பணப் பரிசில்களும் -

மாணவரல்லாத போட்டியாளர்களில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே பதினைந்தாயிரம், பன்னிரண்டாயிரம், பத்தாயிரம் ரூபா எனப் பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-13)

# தாலிக்கொடியைத் திருடியவர் வசமாக மாட்டிக் கொண்டார்

## யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜுலை10

யாழ்.வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு உதவியாக நின்ற இளம் பெண்ணின் தாலிக்கொடியினைத் திருடியவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கடந்த திங்கள் இரவு யாழ். வைத்தியசாலையின் 7ஆம் விடுதி (வாா்ட்டில்)யில் தனது உறவினர் ஒருவருக்கு உதவியாக நின்ற இளம் பெண்ணொருவர் தமது தாலிக் கொடியினைக் கழற்றிப் பாதுகாபபாகப் பணப்பைக்குள் வைத்துவிட்டு நித்திரைக்குச் சென்றுவிட்டார் என்றும் -

சில மணித்தியாலங்களின் பின்னர் கண் விழித்துப் பார்த்தபோது பணப்பைக்குள இருந்த தாலிக்கொடி காணாமற்போயிருந்தது என்றும் - கூறப்பட்டது.

இதனையடுத்து உடனடியாகக் குறிபபிட்ட பெண், வைத்திய தாதி ஒருவரின் உதவியை நாடியுள்ளார். அதன் பின்னர் அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், விடுதியில் உள்ளவர்களைச் சோதனையிட்டுள்ளனர். அப்போது அருகில் இன்னொரு நோயாளிக்கு உதவியாக நின்ற வயோதிபமாது ஒருவருடைய 'நெஸ்ரமோல்ட்' மாப்பேணிக்குள இருந்து தாலிக்கொடி மீட்கப்பட்டது.

தாலிக் கொடியினைத் தானே எடுத்ததாகக் குறிப்பிட்ட வயோதிப மாது ஒப்புக கொண்டதை அடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (எ-13)

# யாழ்.பல்கலையில் குடித்தொகை சார்ந்த டிப்ளோமா கற்கை

## விரைவில் ஆரம்பம் என அறிவிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் குடித்தொகை சார்ந்த பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிக தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் மட்டுமல்லாமல், தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் எதிர் காலத்துக்கு ஏற்றதுமான பாடநெறியை அல்லது சலுகையை இக்கற்கைநெறி கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் புவியியல், பொருளியல், சமூகவியல், மானிடவியல், அரசறிவியல், திட்டமிடல், உளவியல், தூயகணிதவியல், புள்ளிவிவரவியல், சமூக சுகாதாரவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டதாரிகளும் -

குடிக்கணிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம், அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் திட்டமிடற பிரிவு உத்தியோகத்தர்களும் -

அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் ஆகியவற்றைச் சார்ந்த அலுவலகங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய உயரதிகாரிகளும் இந்தக் கற்கைநெறியைப் பயிலமுடியும்.

ஒருவருடக் காலத்தைக் கொண்ட இந்த டிப்ளோமாக் கற்கைநெறி தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படும் இதற்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் விரைவில் கோரப்படவுள்ளன. (10)

### நாளை

ஆனி 27
ஞாயிற்றுக்கிழமை
(11.07.2004)
திதி : நவமி
பகல் 7.16 வரை.
நட்சத்திரம்: அசுவினி
பகல் 8.02 வரை.
சுபநேரம்: 8.59 - 10.29
ராகுகாலம்: 4.29 - 5.59
(பழைய நேரப்படி)

# வேத சிவாகம பாடசாலை நயினாதீவில் திறக்கப்படும்

வலி. தெற்கு,ஜுலை10

அமரர் சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்களின் ஞாபகார்த்தமாகக் குருமார்களுக்கான வேத சிவாகம பாடசாலை இம்மாதம் 15 ஆம் திகதி நயினாதீவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்துக்குருமார்கள் வேத சிவாகம கிரியைகளில் போதிய அறிவும் பயிற்சியும் பெறும் பொருட்டு இலவசமாக நடத்தப்பட உள்ள இப்பாடசாலையில் திருமுறைகள், சமயசொற்பொழிவுகள், கணனிக் கல்வி, ஆங்கிலம் மற்றும் சோதிடம் ஆகிய பாடவகுப்புகளும் நடைபெறவுள்ளன.

இப்பாடசாலையில் இணைந்து பயிற்சி பெறவிரும்பும் இந்துக்குருமார்களுக்குத் தங்குமிட வசதி, மருத்துவ வசதி, உணவு வசதி என்பன இலவசமாக வழங்கப்படும் என பாடசாலை நிறுவுநர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, தமிழ்நாடு, திருச்சியைச் சேர்ந்த சிவஸ்ரீ பரமேஸ்வர சிவாச்சாரியார் மேற்படி பாடசாலையில் வேத சிவாகமப் பாடங்களைக் கற்பிப்பதற்கென வரவழைக்கப்பட்டுள்ளார். (ஐ-152)

### உதயவாக்கு

தாமதங்களும் தவறுகளும் தவிர்க்கப்பட வேண்டியவை.

# அறிவுக்கு விருந்தான நூல்களை மறுபதிப்புச் செய்வது சிறந்தபணி

## ஆன்மவிசாரம் வெளியீட்டு விழாவில் வேதாந்தமடம் சுவாமிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

அறிவுக்கு விருந்தான நூல்களை - அழிவடையும் நிலையில் உள்ள எழுத்துக்களை மீள்பதிப்புச் செய்வது என்பது போற்றத்தக்க பணியாகும்.,

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.கந்தர்மடம் வேதாந்தமடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகள்.

மீள்பதிப்புச் செய்யப்பெற்ற 'ஆன்மவிசாரம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா அண்மையில் கந்தர்மடத்தில் உள்ள வேதாந்த மடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுவாமிகள் தமது தலைமை உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

'ஆன்மவிசாரம்' ஒரு பொற் சுரங்கம். அதனைத் தன் ஆன்மலாபத்துக்காக எழுதியவர் கொழும்புத்துறையில் வசித்த சுப்பிரமணிய ஐயர். இளமையில் கோயிற்கிரியைத் தொண்டு செய்து கற்கவேண்டியவற்றைக் கற்ற இவர், வாலிப வயதில், தமது காலத்து இளைஞர்போல தீச்சுர வாதியாய் இருந்து, தர்க்கநூல் வல்லவராய், பிறிட்டோ முதலியர்களால் பாராட்டப்பட்டார்.

நோயுற்று மீண்டும் தீவிர ஆன்மீகவாதியாகிய கடையிற் சுவாமிகளின் ஞான உயர்வு பற்றி ஒரு நூல் எழுதினார். வேதாந்த மடத்தின பரமகுருவாகிய 'சார்ஜன்ற்' சுவாமிகளுடன் ஞானசம்பாஷனை செய்வதில் இவருக்கு ஆர்வம் இருந்தது.

1912 இல் இறையடி சேர்ந்த இவரது எழுத்துக்கள் பல கவனிப்பாரற்று அழிந்தன. இரண்டு பாகங்கள் எமது மடத்தினால் முறையே 1924, 1930ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. மகா தேவ சுவாமிகள் நூற்றாண்டுவிழா மலரிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றன.

அத்தகைய சிறப்புமிக்கவரின் நூலை இன்று மீண்டும் ஞானசாதகர்கள் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த சரஸ்வதி பிருந்தாவனம் அறக்கட்டளையின் நிறுவுநர் சோ.க.தம்பிப்பிள்ளை பாராட்டப்படவேண்டியவர் என்றார்.

நூலை வெளியிட்டு வைத்த சோ.க.தம்பிப்பிள்ளை தமதுரையில்-

கோபம், வெறுப்பு, பகை, களிப்பு முதலிய உட்பகைகளை வெல்லவும், மனிதர் உயர்ந்த குணாதிசயம் கொண்ட மனிதராய் உயரவும் வழிகாட்டும் நூலாக ஆன்ம விசாரம் அமைந்துள்ளது. இந்த நூல் கிடைத்தற்கு அரிதாயிருந்தபடியால் அறக்கட்டளை மூலம் அதனை வெளியிட்டோம். - என்றார்.

நூல் மதிப்புரை நிகழ்த்திய பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்-

பண்டிதமணியும் பொ.கைலாசபதியும் பாராட்டிய இந்நூலைப் படிப்பதற்கு ஆசைப்பட்டேன். கந்தபுராண கலாசாரம் என்ற நூலில் பண்டிதமணி இடை நிரப்பும் பந்திகளாக இந்நூலில் இருந்து சில மணிகளைப் பொறுக்கி எடுத்திருந்தார். அவற்றைக்கொண்டு நூலின் விலைமதிப்பை அளவிட முடியாது என்பதை உணர்ந்தேன். இப்போது தான் அதனை முழுவதும் படிக்கும் பாக்கியம் பெற்றேன். இதை எழுதியவர் உலகின் மிகப் பெரியசிந்தனையாளருள் ஒருவர் என்று மௌனதவமுனிவர் பொ.கைலாசபதி குறிப்பிட்டது முழுவதும் சரியே - என்றார்.

சிறப்புரையை முன்னாள் அதிபர் ஆ.சபாரத்தினம் நிகழ்த்தினார். (எ)



நிகழ்வில் சரஸ்வதி பிருந்தாவனம் அறக்கட்டளை ஸ்தாபகர் சோ.க.தம்பிப்பிள்ளை நூலை வெளியிட்டு வைக்க இ.குகதாசன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகளும் படத்தில் உள்ளார். (எ)

# சுகாதாரச் சீர்கேடு: உணவகம் மூடப்பட்டது

வலி.தென்மேற்கு,ஜூலை10

மானிப்பாய்ப் பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் செயற்பட்டுவந்த உணவகம் ஒன்று நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் "சீல்" வைத்து மூடப்பட்டுள்ளது.

மானிப்பாய் - காரைநகர் வீதியிலுள்ள இந்த உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி வருவதாகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சுகாதார பகுதியினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் உணவகத்தை உடனடியாக 'சீல்' வைத்து மூடும் படி உத்தரவிட்டார். உரிமையாளருக்கு 5000 ரூபா அபராதமும் விதித்தார். சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின்பு மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் அதை நேரில் பார்வையிட்டு சுகாதாரக் குறைபாடுகள் நீக்கப்பட்டதாக நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் உணவகத்தை மீண்டும் திறந்து செயற்பட அனுமதிக்க முடியும் என்று நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (ஜ-135)

# எரிபொருள் விற்பனை நிலையங்களை கூட்டுத்தாபனக்குழு பார்வையிட்டது

அரியாலை,ஜூலை10

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டது.

கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் டி.ஜஸ்ரின் சில்வா தலைமையிலான இக்குழுவினர் குடாநாட்டில் உள்ள எரிபொருள விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டு அங்கு நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்தனர்.

யுத்த நடவடிக்கைகளினால் பலத்த சேதமடைந்த யாழ்.முற்றவெளியில் உள்ள யாழ்.பல நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தை பார்வையிட்ட இந்தக் குழுவினர் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தை நவீன வசதிகளுடன் விரைவில் புனரமைத்துத் தருவதாக சங்கத் தலைவர் சூ.சிறிலிடம் உறுதி மொழிவழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவினருடன் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், பிராந்திய மேற்பார்வையாளர் ஆர்.நவராஜா ஆகியோரும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

இந்தக் குழுவினர் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களையும் நேரில் பார்வையிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)


## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 - 08 - 1952



விண்ணில் 22 - 06 - 2003

அமரர் **மழவராயர் இராமநாதன்**

(R.T.C. கல்வி நிறுவன அதிபர்)

அன்பெனும் விளக்கேற்றி
அறம்காத்த அன்புருவே!
பண்புக்கு பாடந் தந்து
பார் போற்ற வைத்தீர்!
வஞ்சம் காணா உம் வதனம்
நெஞ்சம் மறந்திடுமா!

மனைவி, தகப்பன்,
சகோதர சகோதரிகள், மாமி, மைத்துனர்,
மைத்துனிமார், பெறாமக்கள்.

தகவல்:
ஞான.திருக்கேதீஸ்வரன
இணுவில் தெற்கு.

(சி-36289)(34-21-17-19)



## UNIVERSITY OF JAFFNA

### DIPLOMA IN ENGLISH FOR ADMINISTRATORS EXAMINATION - 2003

The above Examination will commence on 9th August 2004. Candidates could collect the application form at the Examinations & Admission Branch, University of Jaffna. Completed application should be submitted at the same Office on or before 23rd July 2004.

VICE CHANCELLOR
UNIVERSITY OF JAFFNA.

(C/36286)(40-21-19-17)



## ஆட்டுக்கடா விற்பனைக்கு

இரண்டு பெரிய ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு.

தொடர்பு:
20, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. (33966)



## வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன

01. கேள்விப் பத்திரங்கள் 2004.07.16ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து 'செயலாளர், வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால்மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2004.07.21ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2004.07.21ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதிசேர் வரி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | கரணவாய் மத்தி சோதி வீதி | 7,000.00 | 500.00 | 75.00 |
| 02. | வேரொண்டை கொல்களம் | 1,000.00 | 500.00 | 75.00 |

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.

08.07.2004
(சி-36285) (24)


### கோப்பாய்க்கோட்ட தமிழ்த்தின போட்டி

கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டிகள் இன்று புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலும், நாளை ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெறுமென கோப்பாய்க் கோட்ட உதவிச் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தெரிவித்தார். (72)

### சித்திரபாட வழிகாட்டி இலவச விநியோகம்

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்திர பாடத்தைக் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் சித்திரபாட வழி காட்டியை இலவசமாக வழங்கிவருகின்றது. இதனைப் பெறவிரும்பும் மாணவர்கள் தமது நிறுவனத்தில் இதனைப் பெற்றுக்கொளளலாம் என அந்நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (எ-201)


## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7258222 முதல் 7269951 வரை
சீட்டிழுப்பு இல. 48 திகதி 08-07-2004

வெற்றி எண்கள் **9 1 6 3 2 6** சுப்பர் எண் **08**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,20,46,300/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,20,46,300/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 5,000/- | 5,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,032 | 500/- | 5,16,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,302 | 50/- | 5,15,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,02,087 | 10/- | 10,20,870/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 1,000/- | 1,03,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,033 | 100/- | 1,03,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,205 | 20/- | 2,04,100/- |
| மொத்தம் | 1,24,885 | | 55,17,370/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,17,370/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,23,32,750/-**


தொடர் இல. 6296173 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 12 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7261364-7-28
7261801-4-34
7266943-9-96
7264067-0-89
7264379-0-20

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



ஜப்பானிய 'ஷார்ப்' நிறுவனம் வீடியோ திரையுடன் கூடிய புதிய மொபைல் தொலைபேசிய அறிமுகப்படுத்த உள்ளது. இந்த ஆண்டு இறுதியில் இந்தத் தொலைபேசியை சந்தைக்கு வர உள்ளது. அடுத்த மார்ச் மாதத்துக்குள் ஒரு கோடி செல்போன்களை விற்க 'ஷார்ப்' நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

# கண்ணிவெடியில் சிக்கியதால் ஆப்கானில் பெண்ணொருவர் பலி!

காபூல்,ஜூலை10

ஆப்கானிஸ்தானில் வாக்களித்துவிட்டு வந்த பெண்ணொருவர் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தார்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

ஆப்கானில் ஹமீத் கர்சாய் தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடைபெற்று வருகின்றது.

இருந்தாலும், இங்குள்ள பழைமைவாதிகள தலிபான்களுக்கும், அல்கெய்டாவுக்கும் மறைமுகமாக ஆதரவு அளித்து வருகின்றனர்.

இதனால், வெளிநாட்டுப் படையின் மீது அங்கு அடிக்கடி தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பொதுத் தேர்தலையும் அதிபர் தேர்தலையும் நடத்த கர்சாய் திட்டமிட்டுள்ளார். தற்போது மாகாண சபைத் தேர்தல்கள் கட்டம்கட்டமாக நடைபெற்று வருகின்றன. தேர்தலை குலைக்க தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர். இதனால், வாக்களித்துவரும் பொதுமக்கள் மீதும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மீதும் திட்டமிட்ட தாக்குதலை நடத்திவருகின்றனர்.

தலைநகர் காபூல் அருகே இரு நாள்களுக்கு முன்னர் வாக்களிக்க வந்த நபரை தலிபான்கள் குண்டு வீசித் தாக்கினர்.

நங்கள்ஹார் மாகாணத்தில் கோகியாணி மாவட்டத்தில் வாக்களித்துவிட்டு காரில் திரும்பியபோது கண்ணிவெடியில் சிக்கி பெண்ணொருவர் உடல் சிதறி அவ்விடத்திலேயே பலியானார்; கார்ச் சாரதி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (க)

உலக அரங்கில்

# ஐ.நாவின் அனுமதியின்றி ஈராக்கிலிருந்து யுரேனியத்தை எடுத்துச்சென்றது அமெரிக்கா

## நிர்வாகக் கையளிப்புக்கு சிலநாள்கள் முன்பாகக் கைவரிசை

வாஷிங்டன்,ஜூலை10

இடைக்கால அரசிடம் பொறுப்பை ஒப்படைப்பதற்குச் சில நாள்கள் முன்பாக ஈராக்கிலிருந்து இரண்டு தொன் எடையுள்ள மேம்படுத்தப்படாத யுரேனியம் மற்றும் ஆயிரம் கதிர்வீச்சு மாதிரிகளை அமெரிக்க அதிகாரிகள் விமானம் மூலம் தமது நாட்டுக்கு எடுத்துச்சென்றுள்ளது தெரிய வந்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது அங்கு சூறையாடல் சம்பவங்கள் பல நடந்தன. அப்போது பக்தாத் நகரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் இருந்த அணு ஆயுதக் கிடங்கும் இந்தச் சூறையாடலில் சிக்கியது.

அந்தவேளையில் அங்கு இரண்டுதொன் எடையுள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இவை சர்வதேச அணுச்சக்தி அமைப்பின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அங்கிருந்து யுரேனியத்தையும் கதிர்வீசும் பொருள்களையும் ஜூன் 23 ஆம் திகதி அமெரிக்கா எடுத்துச்சென்றுள்ளது. இதற்கு ஐ.நாவின் அனுமதி பெறப்படவில்லை.

சர்வதேச அணு சக்திச் சட்டங்களுக்கு அமைய ஐ.நா. அணுசக்தி ஆய்வு நிறுவனத்தின் அனுமதி பெற்றே யுரேனியத்தை எடுத்துச் சென்றதாகவும், தீவிரவாதிகளிடம் இவை சிக்கி, அதிலிருந்து வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுவதைத் தடுக்கவே இவற்றைத் தாம் கொண்டு சென்றனர் எனவும் அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்சர் ஸ்பென்ஸ் ஆபிரகாம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில்:

மருத்துவம், விவசாயம் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தும் ஆபத்தில்லாத கதிர்வீச்சுப் பொருள்கள் ஈராக்கிலேயே வைக்கப்பட்டுள்ளன. இந்த அணுஆயுத மையத்தை 'சீல்' செய்து வைத்திருந்த சர்வதேச அணுசக்தி நிறுவனத்துக்கு இது குறித்து முன்னரே தெரிவிக்கப்பட்டது. ஈராக் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது - என்றார்.

அணு ஆயுதங்களைத் தயாரிக்க ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன் ஆரம்பித்த அணு ஆயுத நிலையங்களில் துவைத்தா அணு ஆயுத நிலையமும் ஒன்றாகும்.

1990 ஆம் ஆண்டு வளைகுடாப் போரில் சரணடைந்த ஈராக் அணு ஆயுத நிலையங்களை சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அப்போது இவற்றிலிருந்த வீரியமிக்க யுரேனியத்தை ஐ.நா. பரிசோதகர்கள் பாதுகாப்பாக ரஷ்யாவுக்குக் கொண்டுசென்றனர்.

ஈராக்கின் இறைமையை இடைக்கால அரசிடம் ஒப்படைக்க 5 நாள்களுக்கு முன்னர், எஞ்சியிருந்த கதிர்வீச்சுப்பொருள்களை அமெரிக்கா கொண்டுசென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இவை எடுத்துச் செல்லப்பட்டதாக அமெரிக்கா கூறினாலும அதுபற்றி அணுசக்தி அமைப்புக்கு எந்த ஒரு தகவலும் கொடுக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த செயல் ஐ.நா.சபையின் விதியை மீறியதாகும் என்று கூறப்படுகின்றது. ஐ.நாவின் ஒப்புதலைப் பெறாமல் அணு ஆயுதப் பொருள்களை அமெரிக்கா எடுத்துச் சென்றிருப்பது சட்டவிரோதமானது என்று உலக அமைப்புக்கள் சில கண்டனம் தெரிவித்துள்ளன. (எ-க)

## கப்பல்கள் மோதின 18 பேர் படுகாயம்!

பீஜிங்,ஜூலை10

சீன சரக்குக் கப்பலும் தென்கொரிய சரக்குக் கப்பலும் நேருக்கு நேர் மோதுண்டதில் சீனக்கப்பலில் பயணம் செய்த 18பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவிலுள்ள லுகான் துறைமுகப்பகுதியிலேயே இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

தென்கொரிய கப்பல் மீது மோதுண்டதில் சீனக்கப்பல் நீரில் மூழ்கத்தொடங்கியது. விபத்து பற்றி தகவல் அறிந்தவுடன் சீனப் போர்க் கப்பல்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தன.

கடலில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்த 18 பேரும் மீட்கப்பட்டனர். அவர்கள் அவசரமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். யாருக்கும் உயிர் ஆபத்து இல்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## 'ஸ்பைடர் மானு'க்குத் தடை

பீஜிங்,ஜூலை10

பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் எழுதிய 'ஹரிபெட்டர்' நாவல் திரைப்படமாக வெளிவந்து உலகம் முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றது. வசூலிலும் சாதனை படைத்துள்ளது.

உலகம் முழுவதும் இந்த ஹரிபெட்டர் படமும், ஸ்பைடர்மான் - 2 படமும் வெற்றிகரமாக ஓடும் நிலையில் சீனாவில் இந்தப் படங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. (க)

# மோட்டார் குண்டு வீச்சில் 5 அமெரிக்கர்கள் பலி!

பக்தாத்,ஜூலை10

பக்தாத் நகருக்கு வட பகுதியிலுள்ள சமராவில் தீவிரவாதிகள் நடத்திய மோட்டார் குண்டுத் தாக்குதலில் 5 அமெரிக்கப் படையினரும் ஓர் ஈராக்கியக் காவலரும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க - ஈராக்கியப் படைகளால் உபயோகிக்கப்பட்டு வந்த வீடு நொறுக்கப்பட்டதுடன் 20 அமெரிக்கப் படையினரும் நான்கு ஈராக்கியர்களும் இத்தாக்குதலில் காயமடைந்தனர் என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கிளர்ச்சிக்காரரின் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்ததில் மோட்டார் குண்டுகளும் ஹெலிகொப்டர்களும் பாவிக்கப்பட்டன என்றும் நான்கு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறினார்கள்.

வேறொரு சம்பவத்தில் கண்ணிவெடியில் சிக்கிய கார் ஒன்று வெடித்ததில் பாத் கட்சியின் முன்னாள் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

மத்திய பக்தாத்தில் இரு ஈராக்கிய காவலர்களைக் கிளர்ச்சியாளர்கள் கொன்றதையடுத்து ஈராக்கிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களை எதிர்த்து முறியடிப்பதற்கான புதிய சட்டம் ஒன்றை உருவாக்கியது. இதையடுத்து இப்பொழுது புதிய தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

புதிய தாக்குதல்களில் மூன்று சிவிலியன்களும் கொல்லப்பட்டிருப்பதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டுத்தாக்குதல்களையடுத்து அமெரிக்க - ஈராக்கியப் படைகள் அப்பகுதியை சல்லடை போட்டுத் தேடியபோது தப்பி ஓடி ஒரு கட்டடத்துக்குள் புகுந்த நபர்கள் மீது சுட்டு அவர்களைக் கொன்றனர். (ப)

## சதாமின் உறவினர் ஒருவர் கைதானார்

பக்தாத்,ஜூலை10

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைனின உறவினர் ஒருவரும், மொராக்கோ நாட்டைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தகவலை ஈராக் மனித உரிமைகள் துறை அமைச்சர் பக்தியார் ஆமின் தெரிவித்தார்.


சதாமின் உறவினரான முகம்மது பர்ஸான் அல்திக்ரிதி, மொராக்கோவைச் சேர்ந்த ஜோர்ஜ் பின் பக்கி ஆகியோர் ஜோர்தானின் எல்லைப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். இதனை அமைச்சர் செய்தியாளர்களிடம் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அபூ-கிரைப் சிறைச்சாலையில் மட்டும் 20 வெளிநாட்டவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் மொத்தம் 90 வெளிநாட்டுக் கைதிகள் உள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

# போலி முத்திரை மோசடியில் ரஜனிகாந்துக்குத் தொடர்பா?

பெங்களூர்,ஜூலை10



கர்நாடக முன்னாள் முதல்வர் கிருஷ்ணா மற்றும் அப்போதைய அமைச்சர்கள் சிலரின் வற்புறுத்தலால் நடிகர் ரஜனிகாந்தின் முகாமையாளரிடம் 20 கோடி ரூபாய் கொடுத்தேன் - என்று போலி முத்திரைத்தாள் மோசடியில் கைதான கர்நாடக முன்னாள் பொலீஸ் அதிகாரி சங் கர்ராம்சிங் நீதிபதி முன்னிலையில் பரபரப்பு வாக்குமூலம் அளித்தார்.

பொலீஸ் அதிகாரியின் இந்த வாக்குமூலத்தால் போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கிலும், நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்திலும் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கு தொடர்பாக கர்நாடக ஓய்வு பெற்ற பொலீஸ் உதவி கமிஷனர் சங்கர் ராம் சிங். இன்ஸ்பெக்டர் வாலி பாஷா, சப்.இன்ஸ்பெக்டர் கான் ஆகியோரை சி.பி.ஐ.பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். இவர்கள் வீட்டில் சோதனை நடத்தி பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப் பட்டன.

சங்கர் ராம்சிங், வாலி பாஷா, கான் ஆகியோர் அன்று மாலையில் பெங்களூர் முதலாவது ஏ.சி. எம்.எம்.நீதிமன்றத்தில் நீதிபதி சாம்ராணி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். அப்போது, மாஜி பொலீஸ் உதவி கமிஷனரான சங்கர் ராம் சிங் வாக்குமூலமளித்தார்.

கர்நாடக முன்னாள் முதல்வர் கிருஷ்ணா. அவரது அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த மல்லிகார்ஜூனகார்கே, சிவகுமார், பொலீஸ் ஐ.ஜி.பி.ஜெயபிரகாஷ், கிருஷ்ணாவின் மருமகன் சித்தார்த்தா ஆகியோரின் வற்புறுத்தல் காரணமாக நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட நேரத்தில் நடிகர் ரஜனிகாந்தின் மனேஜரிடம் 20கோடி ரூபா கொடுத்தேன் - என்று அவர் கூறினார். (ஐ)

# நடிகர் சிவாஜி கணேசனின் வீட்டில் தீ அனர்த்தம்

சென்னை,ஜூலை10



மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டில் தீவிபத்து ஏற்பட்டிருக்கிறது.

சென்னை தி.நகரில் அன்னை இல்லம் என்று அழைக்கப்படும் இந்த வீட்டில் சிவாஜியின் மனைவி கமலா அம்மாள், நடிகர் பிரபு, ராம்குமார், சிவாஜியின் சகோதரர் மற்றும் குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள்.

நேற்றுமுன்தினமிரவு 11 மணி அளவில் இங்கு திடீரென்று தீவிபத்து ஏற்பட்டது. வீட்டின் மாடியில் சிவாஜி கணேசனின் அறை உள்ளது. அந்த மாடிக்குச் செல்ல 100 ஆண்டு பழைமை வாய்ந்த தேக்கு மர படிக்கட்டுகள் இருந்தன.

இந்தப் படிக்கட்டில் பற்றிய தீ மேலேயுள்ள கூரை பந்தலுக்கும் பரவியது. இதனால், படிக்கட்டும், பந்தலும் மளமளவென எரிந்தன.

தீவிபத்து ஏற்பட்டபோது சிவாஜியின் மனைவி கமலா அம்மாள், நடிகர் பிரபு, ராம்குமார் உட்பட அனைவரும் வீட்டுக்குள்தான் இருந்தனர்.


தீயணைப்பு நிலையத்துக்கும் உடனே தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் 10 வண்டிகளில் சென்று தீயை அணைத்தனர். 8 தண்ணீர் லொறிகளும் தீயை அணைக்க அனுப்பிவைக்கப்பட்டன. சுமார் 3 மணி நேரம் போராடி அதிகாலை 2 மணிக்கு தீமுற்றிலும் அணைக்கப்பட்டது.

இந்த தீவிபத்தில் வீட்டில் இருந்த பழங்கால கலைப்பொருள்கள், ஷோபா, கட்டில், பீரோ, துணிகள், தேக்கு மர படிக்கட்டுகள் உள்பட பலபொருள்கள் எரிந்து நாசமாகின. கீழ் தளத்தில் இருந்த பெரும்பாலான பொருள்கள் எரிந்துவிட்டன.

இதில் சுமார் 5 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் எரிந்து நாசமானதாகவும் ரூ.25 லட்சம் மதிப்புள்ள பொருள்களை காப்பாற்றியதாகவும் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.(ஐ)

# ஜனநாயகப் போர்வையில் புலிகள் எதிர்ப்புக் கூட்டணி

**கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேறித் தற்போது கொழும்பில் தங்கியுள்ள கருணா, ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் நோக்கில் புதிய அரசியல் கட்சி யொன்றை ஆரம்பிக்கவிருப்பதாகச் செய்திகள் அடிபடும் இவ்வேளையில், அவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆனந்த சங்கரி ஆகியோருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருவதாக 'லக்பிம' பத்திரிகை குறிப்பிடுகின்றது. இது தொடர்பாக 'லக்பிம' பத்திரிகையில் திஸ்ஸ ரவீந்திர பெரேரா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**



கருணா என அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரனின் பிரச்சினை மீண்டும் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

கருணா மீன் சின்னத்தைக் கொண்ட புதிய அரசியல் கட்சியை உருவாக்கி அரசியலில் இறங்குவது என எடுத்த தீர்மானம் மற்றும் கருணாவுக்கு இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என விடுதலைப் புலிகள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் குற்றச் சாட்டுக்கள் ஆகியனவே இந்தச் சர்ச்சைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

அரசு கருணாவை தன்வசம் வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளை ஓரங்கட்ட முயல்வதாக அண்மையில் தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

கருணாவுக்கு இராணுவம் ஆதரவளித்து வருவது தொடர்பாகத் தம்மிடம் தெளிவான சான்றுகள் உள்ளன எனவும் - இது எதிர் காலத்தில் பாரதூரமான விளைவுகளை உருவாக்கும் எனவும் - கருணாவுக்கு உதவிகளை வழங்குவதைப் பாதுகாப்புப் படையினர் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் தமிழ்ச் செல்வன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் தெரிவித்திருந்தார்.

கருணாவுக்குப் படையினர் ஆதரவு வழங்குகின்றனர் என்ற காரணத்தால் வடக்கு - கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம் பெறும் இராணுவத்தினருடனான சந்திப்புக்களை நிறுத்துவது எனத் தெரிவித்த விடுதலைப் புலிகள் அந்தச் சந்திப்புக்களைக் கைவிட்டுள்ளனர்.

கருணா அம்மானைக் கைதுசெய்து மேல் நடவடிக்கைகளுக்காகத் தம்மிடம் ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வனனியைச் சேர்ந்த புலிகள் கடந்த ஏப்ரல 9ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து கருணா தனது அமைப்பை ஏப்ரல் 11ஆம் திகதி கலைத்துவிட்டார்.

தான் இறப்பதும், தான் போராடுவதும் தனது தாயக மண்ணிலே எனவும் தனது அமைப்பு உறுப்பினர் எவராவது சிறிதளவேனும் பாதிப்புக்குட்பட்டால் வன்னிக்கு நல்ல பாடம் புகட்டுவேன் எனவும் கருணா தனது அமைப்பைக் கலைப்பதற்கு முன்னரே தெரிவித்திருந்தார்.

"எங்களைச் சுதந்திரமாக வாழ விடுங்கள் என நான் பலமுறை தலைவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன். எமது வயல்களில் நாங்களே பயிரிட, எமது தோட்டங்களில் தென்னங்கன்றுகளை நடுகை செய்ய எமக்கு இடமளியுங்கள் என நாம் கோரினோம். எமது பிரதேசத்தில் நல்ல வளங்கள் உள்ளன. நெல் மற்றும் தென்னை ஆகியன பயிராகின்றன. இருப்பினும் நாங்கள் பலத்துடன் இருந்த காரணத்தால் வன்னி எமக்குப் பயந்து இவற்றிற்கு இடமளிக்கவில்லை" எனக் கருணா தெரிவித்திருந்தார்.

உருவான புதிய நிலையை அடுத்து ஐ.தே. கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவுடன் வாகனத்தில் ஏறிய கருணாவும் அவரது சகாக்களும் கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி கொழும்பு வந்தடைந்தனர். மட்டக்களப்பில் புலிபாய்ந்தகல் என்ற இடத்தில் வாகனத்தில் ஏறிய அவர்கள் தம்புள்ள ஊடாகக் கொழும்பை வந்தடைந்தனர்.

இந்தக் குழுவில் கருணாவின் செயலாளர் வரதன், மட்டக்களப்பு - அம்பாறை மகளிர் படையணியின் விசேட தலைவி நிலாவினி மற்றும் தலைவிகளான பிரேமினி, லாவண்யா, தீந்தமிழ் ஆகிய 17 பேர் அடங்கியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்களான ரமேஷ் மற்றும் கரிகாலன் ஆகியோரின் வேண்டுகோள்களை அடுத்தே தான் கருணா குழுவினரை கொழும்புக்கு அழைத்துச் சென்றதாக அலிஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அழைத்து வரப்பட்ட குழுவினர் கொழும்பில் "ஹில்டன்" ஹோட்டலில் மூன்று தினங்கள் தங்கவைக்கப்பட்டனர் எனவும், நுகேகொடவிலுள்ள பாதுகாப்பு வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டு பின்னர் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரால் வேறு இடத்தில் தங்க வைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கருணாவால் கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட குழுவில் இருந்து தப்பி மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் இணைந்துள்ள பெண் போராளிகளின் தகவல்களின்படி இந்த விடயம் வெளிவந்தது.

ஜூன் 13ஆம் திகதிவரை தங்களுடன் தங்கியிருந்துவிட்டு தனது குடும்பத்துடன் வெளிநாடு ஒன்றுக்குச் செல்வதாக கருணா கூறிச் சென்ற பின்னர் ஜூலை 18ஆம் திகதி தாங்கள் மட்டக்களப்பு வந்ததாக நிலாவினி தெரிவித்துள்ளார்.

கருணா அம்மான், கொழும்பில் இருந்ததாகக் கூறப்படும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் கபில ஹெந்தா விதாரண, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பல இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தான் அமைப்பைக் கைவிட்டு பின்வாங்கிய போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினர்களுக்கு எதுவித தீங்கையும் இழைக்கவில்லை எனவும், இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுவதாகவும் ரமேஸுடன் மேற்கொண்ட இணக்கப்பாட்டை அடுத்தே தான் கொழும்பு வந்ததாகவும் கருணா தெரிவித்தார்.

ஆனால், அந்த இணக்கப்பாட்டை முறித்து ரமேஸின் முகாம் மற்றும் அவரது அணியினர் மீது தாக்குதல்களை மேற்கொள்வது மற்றும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரைக் கொலை செய்வது என முடிவெடுத்து கருணா குழுவினர் செயற்பட்டதால் கருணாவைத் தேட வேண்டிய அவசர தேவை விடுதலைப்புலிகளுக்கு உருவானது.

கருணா தனக்கு 5 கோடி ரூபா தருமாறும் தனது உறுப்பினர்களுக்கு உலர்உணவு வழங்குமாறும், மகாவலித் திட்டத்தை கரடியனாறு வரை நீடிக்குமாறும் அரசிடம் கோரியிருந்தார். தனது வேண்டுகோளை அரசு ஏற்குமாயின் தான் 2ஆயிரத்து 500உறுப்பினர்களுடன் ஆயுதங்களைக் கையளித்துவிட்டு அரசிடம் சரணடைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுவதாகவும் அரசுக்குத் தெரிவித்திருந்தார்.

கருணாவின் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாலும் ரமேஸுடன் காணப்பட்ட இணக்கப்பாடு முறிவடைந்ததாலும் கருணாவை எப்படியேனும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு உருவானது.

இந்திய அமைதிப் படையைப் போலவே அரச படைகளாலும் தரைவழித் தாக்குதல்களையோ, வான்வழித் தாக்குதல்களையோ மேற்கொண்டு கைப்பற்ற முடியாத தொப்பிக்கல முகாம்கள் தற்போதும் கருணா குழுவின் வசம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா தனது அமைப்பைக் கலைத்து 3 மாதங்கள் கழிந்த நிலையிலும் தொப்பிகல முகாம் இதுவரை ரமேஸ் அணியினரால் கைப்பற்றப்படவில்லை.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோரைக் கலந்தாலோசித்த பின்னரே ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்கும் முடிவுககு வந்துள்ள கருணா, கிழக்கு மாகாணத்தில் மிகப் பாதுகாப்பான இடமொன்றில் தங்கியருந்தே இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிகிறது. கருணாவின் இம் முயற்சிகளுக்கு அவரது மூத்த சகோதரியின் கணவரான மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தனபாலனும் பக்கபலமாக இருந்துள்ளார்.

கருணா தாம் பிரவேசிக்க இருக்கும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்கு ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆனந்தசங்கரியினதும் தொடர்ச்சியான ஆலோசனைகளைப் பெற்றே செயற்பட்டு வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கருணா அணியென்ற பெயரில் மீன் சின்னத்தில் தமது கட்சியைப் பதிவுசெய்ய கருணா தீர்மானித்துள்ளார். மட்டக்களப்பில் உள்ள கிரான் பாடசாலை வீதியைத் தமது கட்சியின் விலாசமாகவும் கருணாவைக் கட்சியின் தலைவராகவும், மாறனைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், பொருளாளராக ஏதுகனையும் குறிப்பிட்டுத் தமது கட்சியைப் பதிவு செய்யுமாறு தேர்தல் ஆணையாளரைக் கோர கருணா தரப்பு தீர்மானித்துள்ளது.

ஒன்பது பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ள தமது அரசியல் கட்சியின் யாப்புத் தொடர்பாகத் தமது சட்டநிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு முனைந்துள்ள கருணா, கிழக்கு மாகாணத்தில் சீர்குலைந்துள்ள நிர்வாகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதையும் தாம் இழந்துள்ள அதிகார பலத்தைத் தம்வசமாக்கிக் கொள்வதையுமே இந்த அரசியல் பிரவேசத்தின் மூலம் சாதிக்க முயல்வதாகத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க கருணா தரப்பினரால் விடுக்கப்படும் இவ்வித அச்சுறுத்தல்கள் காரணமாக தமது உறுப்பினர்களை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி கருணாவைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரபாகரன் மேற்கொண்டு வருகிறார்.

பிரபாகரன் தங்கியிருக்கும் வன்னிப் பிரதேசத்திலுள்ள போக்குவரத்து மார்க்கங்கள் யாவும் மாலை 6.00 மணியோடு மூடப்பட்டு பின்னர் மீண்டும் அம்மார்க்கங்கள் மறுநாள் காலை பலத்த சோதனைகளின் பின்னர் திறக்கப்படுவதற்கு காரணம் கருணாவினால் விடுக்கப்படும் இத்தகைய அச்சுறுத்தல்களே ஆகும்.

வன்னிப் பிரதேசத்தில் வைத்து அரச ஆயுதப் படைகளின் நீண்ட தூர பரிசீலனை கிளைமோர் (எல்.ஆர்.ஆர்.பி.) தாக்குதலுக்குள்ளாகி விடு தலைப் புலிகளின் விமானப்படை பிரிவின் தளபதியான சங்கர் கொலையுண்ட பின்னரான காலப்பகுதியிலும் கூட இத்தகைய பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு பிரபாகரன் சாதாரண உடையில் அரச போக்குவரத்துச் சபையின் பஸ்களில் தமது பயணங்களை மேற்கொண்டுள்ள தகவல்களும் தற்போது வெளிவந்துள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பை விட்டு கருணா வெளியேறிய பின்னர் அரச அதிபர் மட்டத்திலிருந்து சாதாரண பொதுமக்கள் மட்டம் ஈறாக கிழக்கு மாகாணத்தின் சகல செயற்பாடுகளும் முற்றிலுமாக சீர்குலைந்து போயுள்ளமையால் கிழக்கு மாகாணத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர கருணா அரசியலில் பிரவேசிக்கத் தீர்மானித்துள்ளார் போலும்.

இதற்கிடையில், 'விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற அரசியல் கட்சிகளை ஒருங்கிணைக்கும் யோசனையொன்று முன் வைக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த சிக்கலான நிலையில், கிழக்கு மாகாணத்திலிருந்து கருணா தரப்பை வெளியேற்றுவதா? அல்லது பிரபாகரனின் கீழ் இயங்கும் ரமேஷ் அணியை வெளியேற்றுவதா என்பதே இன்று இரு தரப்புகளும் எதிர்நோக்கியுள்ள சவாலாகும். ★

**தமிழில் : கஜனி**

## அதி உயர் பாதுகாப்பு வலயங்களால் உருவாகியுள்ள

# கடற்றொழில், விவசாயப் பாதிப்புகள் ஜப்பானிய தூதரகக் குழுவுக்கு விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ். குடாநாட்டில் படைத்தரப்பினால் வரையறை செய்யப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் காரணமாக விவசாய மற்றும் மீனவக் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜப்பானிய தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் வருகை தந்த ஜப்பானிய அதிகாரிகள் யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் உட்படத் திணைகளத் தலைவர்களைச் சந்தித்துக் குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்தபோதே இத்தகவல் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தமது வீடுகள் மற்றும் விவசாய நிலங்களை கொண்டுள்ளவர்கள் அங்கு வசிக்கமுடியாத காரணத்தினால் விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக அவர்கள் கடந்த பல வருடங்களாக நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதுடன் தமது ஜீவனோபாயத்துக்கும் பெரும் கஷ்டப்படுகின்றனர். இதே போன்று கடல்வலயத் தடைச்சட்டத்தின் காரணமாக பெருமளவு மீனவக் குடும்பங்கள் தமது தொழிலை ஒழுங்காக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இதனால், முன்னர் குடாநாட்டு மக்களின் கடலுணவுத் தேவையைப் பூர்த்திசெய்து வந்த மீனவர்கள் இப்பொழுது தமது அன்றாடச் சீவியத்துக்கே கஷ்டப்படுகின்றனர்.



- இவ்வாறு ஜப்பானியக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவினர் பின்னர் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழுவினர் விவசாய நடவடிக்கைகளையும் மற்றைய குழுவினர் கடற்றொழில் தொடர்பான நடவடிக்கைகளையும் நேரில் பார்வையிட்டனர்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் கமநல அபிவிருத்தித் திணைக்களம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் , புத்தூர் கமநல கேந்திர நிலையம் மற்றும் கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கமநல கேந்திர நிலையங்கள் ஆகியவற்றுக்கும் விஜயஞ் செய்து அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தலைமையில் சென்ற குழுவினர் பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்றொழில் சமாசத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். வியாபாரிமூலைப் பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மயிலிட்டி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்ததுடன் சேதமடைந்த நிலையிலுள்ள கற்கோவளம் பனிக்கட்டித் தொழிற்சாலையையும் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், புங்குடுதீவு மற்றும் வேலணை ஆகிய பகுதிகளுக்கும் நேரில் விஜயஞ் செய்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

(ஐ-10-5)

# போரால் அனைத்தையும் இழந்தேன்; உழைப்பை இழக்காததால் இன்று உயர்ந்துள்ளேன்

**'ஐக்கிய நம்பிக்கை உபகரணம்' (Equip Unit Trust) என்ற தளபாட உற்பத்தி நிறுவனத்தின் அதிபர் வேலுப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா உழைப்பால் உயர்ந்தவர்களில் ஒருவர். தனது நிறுவனத்தின் இன்றைய நிலை அதனை இந்நிலைமைக்குக் கட்டியெழுப்புவதற்காகத்தான் கடந்துவந்த பாதை என்பவற்றை மறைக்காது மனந்திறந்து உதயன் வாசகர்களோடு இங்கு பகிர்ந்து கொள்கிறார் அவர்.**




கடந்த பன்னிரண்டு வருடங்களாக கடுமையாக உழைத்திருக்கிறேன்.

அதன் விளைவாக எனது கனவை இன்று நனவாக்கியிருக்கிறேன் என்று பெருமையுடன் கூறுகிறார் ஸ்ரீஸ்கந்தராஜா.

1985 இல யாழ்ப்பாணத்தில் இயங்கிவநத 'OFFICE EQUIPMENT' என்ற தனியார் தளபாட உற்பத்தி நிறுவனத்தில் சாதாரண தொழிலாளியாகத் தனது தொழில்வாழ்வை ஆரம்பித தார் ஸ்ரீஸ்கந்தராஜா. அப்போதே அந்நிறுவனம் தயாரித்த தளபாடங்களை கலைநயத்துடன் வடிவமைப்பதில் மிகவும் ஆர்வத்துடன் அவர் ஈடுபட்டார்.

*நேர்காணல்:*
**ஆர்.மார்க் அன்ரனி**

### கனவும் நனவும்

அந்த நிறுவனத்தில் வேலைசெய்யும் காலத திலேயே இப்படி ஒரு நிறுவனத்தை நாம் சொநதமாக நடத்தவேண்டும் என்ற உந்துதல் எனக்குள்ளே இருந்து வந்தது. அப்போது வறுமை, வாழ்க்கை இரண்டுக்குமிடையில் நான போராட வேண்டியிருந்தது. அப்படி இருந்தும் கூட வீட்டில் சில தளபாடங்களை தயாரித்து வந்தேன். அவற்றிற்கு வர்ணந்தீட்டுவதற்குக் கூட எனக்கு ஒவ்வொரு சம்பளத்திலும் 100 மில்லி மீற்றர், 50 மில்லிமீற்றர் என வர்ணப்பூச்சுகளை வாங்கி வர்ணந்தீட்டி முடிக்க ஆறுமாதங்கள் கூட எடுத்திருக்கிறது என்றார் அவர்.

ஆனால், இன்று அவர் கண்களுக்கு முன்னால் சுமார் 25 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அவரது சொந்தத் தொழிற்சாலையில் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். இரவு, பகல் எனச் சுறுசுறுப்பாக இயங்கும் அநதத் தளபாட உற்பத்தித் தொழிற்சாலை சர்வதேச தரத்திலான தளபாடங்களை தாயகமண்ணில் உற்பத்திசெய்து வருகிறது. 'ஐக்கிய நம்பிக்கை உபகரணம்' நிறுவனத்தில் வடிவமைககப்பட்டுத் தயாரிக்கப்பட்ட தளபாடங்களே அருகில் உள்ள படங்களில் காணப்படுகின்றன.

### சந்தை நிலைவரம்

வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்களைப பெற்று திட்டமிடல், வடிவமைப்பு, அலங்காரம், உற்பத்தி சந்தைப்படுத்தல் உட்பட சகல நடவடிக்கைகளையும் நாமே மேற்கொண்டு வருகிறோம். தற்போது சுன்னாகம் மற்றும் புதுக குடியிருப்பு ஆகிய பகுதிகளில் எமது இரண்டு



விற்பனைக் காட்சி அறைகள் உள்ளன. தவிர யாழ்ப்பாணத்திலும், வன்னியிலுமுள்ள பல தளபாட விற்பனை நிலையங்களுக்கு தளபாடங்களை விநியோகித்து வருகிறோம் - என்றார் அவர்.




ஏன் நீங்கள் உள்ளூர் மூலப்பொருள்களைப (குறிப்பாக மரங்களை) பயன்படுத்தி தளபாடங்களை உற்பத்தி செய்யவில்லை எனக் கேட்டோம். இன்று தென்பகுதியிலுள்ள பல நிறுவனங்கள் மலிவான முறையில் தளபாடங்களை இங்கு சந்தைப்படுத்துகிறார்கள். எனவே, அவர்களோடு போட்டியிட வேண்டியுள்ளது. உள்ளூர் மூலப்பொருள்களின் அதிகரித்த விலை காரணமாக அவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து சந்தையில் போட்டியிடுவது என்பது சாததியமாகாது. என்றாலும், அவர்களை விட தர நிர்ணயத்தில் நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். எம்மிடமுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒருகுறியீட்டு இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தாம் தயாரிக்கும் தளபாடத்தில் உரிய குறியீட்டு இலக்கத்தை பொறிக்கவேண்டும். தளபாடங்களில் குறைபாடுகள் ஏற்படும்போது குறித்த தொழிலாளி இனங்காணப்பட்டு அவர் விட்ட தவறு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று கூறினார் ஸ்ரீஸ்கந்தராஜா.

### வங்கிகளால் பயனில்லை

- இவ்வாறு சிறப்பான முறையில் தளபாடங்களை உற்பத்திசெய்யும் நீங்கள் ஏன் நாடு முழுவதும் அதை சந்தைப்படுத்தக்கூடாது என்று கேட்டோம். சந்தைப் படுத்தலாம்தான் ஆனால், எல்லாவற்றிற்கும் நிதிப்பிரச்சினையே தடையாக இருக்கிறது என்றார்.

தற்போதைய நிலையில் வங்கிகள் மூலம் உதவிபெற்று வர்த்தகத்தை விரிவுபடுத்தலாமே என்று கேள்வி எழுப்பினோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள எந்த வங்கியிலும் வெளியில் கூறப்படுவதைப் போன்று உள்ளக செயற்பாடுகள் இல்லை. கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு கடன்கொடுப்போம் என்பார்கள். அங்குபோனால் அதைக் கொண்டுவா இதைக் கொண்டுவா என்று ஆயிரம் நடைமுறைகள். உதாரணமாக எம்மிடம் வரும் ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் ஒரு மாதத்திற்குள் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களைச் செய்து தரும்படி கேட்பார்கள். இதற்காக நிதியுதவி பெற வங்கியிடம் சென்றால் அவர்கள் நிதிதர 3 மாதம் ஆகும். இந நிலையில் தொழிலை எப்படிச் செய்வது? எப்படி விஸ்தரிப்பது? இப்படித்தான் என்னைப் போன்ற உள்ளூர் சுயதொழில் முயற்சியாளர் மிக அதிகமான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே முன்னுக்கு வரவேண்டியுள்ளது என்று உண்மைநிலையை விளக்கினார் அவர்.

### தொழிலாளர் நலன்

ஒரு தனிநபர் முயற்சியாக அவர் ஆரம்பித்து நடத்திவரும் 'E.U.T.' தளபாட உற்பத்தி, நிலையத்தின் தொழிலாளர்களுக்கென அவர் ஓர் ஓய்வூதியத திட்டத்தையும் செயற்படுத்தி வருகிறார். தனது தொழிலாளர்கள் தொழில்செய்யும் வலுவை இழந்தபின் இந்த ஓய்வூதியம் அவர்களுக்குக் கைகொடுக்கும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார் தொழிலதிபர் ஸ்ரீஸ்கந்தராஜா.

தமது தொழில் முயற்சியோடு சமூக நலன் உதவிகளைப் புரிவதிலும் ஸ்ரீஸ்கந்தராஜா ஆர்வம் காட்டிவருகிறார். 1995 ஆம் ஆண்டு இடம பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்தபோது தட்டச்சு இயந்திரம், 'றோணியோ' இயந்திரம் போன்றவை பயன்படுத்துதல், திருத்துதல் தொடர்பான பயிற்சி நெறிகளை இலவசமாக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கி அதற்கான சான்றிதழ்களையும் வழங்கியுள்ளார். தட்டச்சு, றோணியோ இயந்திரம் பழுதுபார்த்தல் இவரது இன்னொரு



தொழில்.

### முயற்சி வெற்றி தரும்

எந்தத்தொழிலும் ஆரம்பத்தில் நஷ்டங்களையும் சவால்களையுமே எதிர்கொள்ள நேரிடும். அதற்காக தொழிலை மாற்றவோ கைவிடவோ கூடாது. தொடர்ந்து முயற்சி செய்தால் நல்ல பயனை அறுவடை செய்யலாம். நான் கூடக் கடந்தகால வன்முறைகளின்போது எமது தொழில் அடிப்படைகளை மூன்று முறை முற்றாக இழந்திருக்கிறேன். ஆனால், தொடர்ந்து அயராத முயற்சிமூலம் இன்று வெற்றி பெற்றிருக்கிறேன். இன்றும் எனது நிறுவனத்தை விஸ தரித்து தரமான உற்பத்திகளைத் தரக்கூடிய- பலருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கக்கூடிய நிறுவனமாக வளர்த்தெடுக்க வேண்டுமென்பது என் இலட்சியம் எனத் தெரிவித்தார் E.U.T யின் முகாமையாளர் வே.ஸ்ரீஸ்கந்தராஜா.

அவரது இலட்சியம் நிறைவேற உதயன் சார்பில் வாழ்த்துறோம்.

★ ★ ★

---

**கொள்ளுப்பிட்டிச் சம்பவம்**

# சமாதான முயற்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது

**ஐ.ம.சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பு**

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் சமாதான முயற்சிகளில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தமாட்டாது. இது தொடர்பாக மக்கள் எதுவித பீதியோ குழப்பமோ அடையத் தேவையில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவும் ஜே.வி.பி. பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸவும் தெரிவித்துள்ளனர். இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி முன்னணியின் பத்திரிகையாளர் சந்திப்பில் இவர்கள் அரசின் நிலைபாட்டை வெளியிட்டனர்.

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற சம்பவம் அரசியல் எதிரியை நோக்கமாகக்கொண்டது. மீண்டும் போருக்குப்போகும் நோக்கம் கொண்டதல்ல. சமாதான முயற்சிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படமாட்டாது - என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அங்கு மேலும் கூறியதாவது:-

அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீரும். மாகாணசபைத் தேர்தலின் பின்னர் அனைத்தும் நடைமுறைப் படுத்தப்படும்.

நாம் பதவிக்குவந்த இரண்டரை மாதங்களில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. உலக சந்தையின் விலையேற்றத்துக்கு ஏற்ப எரிபொருள் விலைகள் அதிகரிக்க வேண்டும். ஆனால், அந்தச் சுமையை மக்களின மேல் சுமத்தாமல் அரசே சகலவற்றையும் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கவில்லை. இதேபோன்று பல சுமைகளை அரசே ஏற்றுள்ளது.

34 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இன்னும் இரண்டு மாதங்களில் தொழில்வாய்ப்பு வழங்கப்படும். சிதைந்து போயிருந்த அரச நிறுவனங்களை இப்போதுதான் சரியான வழிக்கு நகர்த்திச் செல்கின்றோம். கொடுத்த வாக்குறுதிகளைக குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியாது. உரத்துக்கு விதிக்கப்பட்ட வற்வரி நீக்கப்பட்டுள்ளது. நாம் கொடுத்த வாக்குறுதியின்படி மானிய விலையில் உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவது மட்டுமின்றி வரியையும் நீக்கியுள்ளோம்.

இந்தத் தேர்தல் மக்களை நாடி பிடித்துப் பார்க்கும் ஒரு களமாக அமைந்துள்ளது. மக்கள் எமக்கு வாக்களித்து நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக எம்மை வெற்றி பெறவைப்பார்கள் - என்றார்.

### அரசுக்கு எதிரான சம்பவமல்ல

கொள்ளுப்பிட்டி குண்டுத்தாக்குதல் அரசுககு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல் அல்ல. அது ஈ.பி.டி.பியின் தலைவரைக் குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், பாரிய இழப்பு ஒன்று தடுக்கப்பட்டது என்று செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ இப்படிக்கூறினார். தொடர்ந்து அவர் கூறியதாவது:-

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை தீர்த்துக்கட்டுவதற்கு விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றனர். அப்படி அவர்கள் செய்த முயற்சி மீண்டும் தோலவி கண்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்ட பெண்ணின் மேல் கொண்ட சந்தேகம் உறுதியாக்கப்பட்டது. சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலீஸாரின் குடும்பங்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இந்தப் பெண் கொழும்புக்கு வந்துள்ளார். கடந்த அரசு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்பாட்டின் பின்னர் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மேற்கொண்ட சீர்கேட்டினால் ஆயுதாரிகளும் குண்டுதாரிகளும் கொழும்புக்குள் சுலபமாக ஊடுருவி விட்டார்கள். -என்றார் அவர். (ப-க)

---

## கிளிநொச்சியில் பெண் படைப்பாளர்களின் படைப்பாக்கற் களநிகழ்வு

கிளிநொச்சி,ஜூலை10

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் இளம் பெண் படைப்பாளர்களுக்கான படைப்பாக்கற்களம் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டப்பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல் நிகழ்வுகளும் கப்டன் வானதியின் திருவுருவப்படத்திற்கான சுடரேற்றல், மலர் மாலை அணிவித்தல் நிகழ்வுகளும் இடம்பெறும்.

அடுத்து, வரவேற்பு, அறிமுக நிகழ்வு ஆகியவற்றைப் போராளி தமிழவன் நிகழ்த்துவதைத் தொடர்ந்து அ.யேசுராசா, செம்பியன் செல்வன், செ.யோகநாதன், போராளி மலைமகள் ஆகியோரின் கருத்துரைகளும், குழுக் கலந்துரையாடலும் இடம்பெறும்.

போராளி உலகமங்கையின் நிறைவுரையைத தொடர்ந்து நிகழ்வு நிறைவுபெறும்.

(எ-201)

## முன்பள்ளிக் கண்காட்சி

வலிகாமம்.தெற்கு,ஜூலை10

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய உடுவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள இணைந்து நடத்தும் முன்பள்ளிக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மருதனார்மடம் இராமநாதன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறஉள்ளது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய உடுவில் பிரதேச தலைவர் தி.அன்ரன்லீனஸ் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் கலந்துகொள்கின்றார். (ஜ-152)

உ
சிவமயம்

கோகிலாக்கண்டி அம்பலத்தார்அடி

## திருவருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் திருக்கோயில்

பஞ்சகுண்ட பக்ஷ

# மஹாகும்பாபிஷேகம்

14.07.2004 புதன்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

எண்ணெய்க்காப்பு: 13.07.2004 செவ்வாய்க்கிழமை
காலை 9 மணி தொடக்கம்
மாலை 4 மணி வரை.

பிரதம குரு:

**தியாக கெங்காதரக்குருக்கள்**
(புன்னாலைக்கட்டுவன்)

அனைவரும் வருக! அருள் பெறுக!

ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
கோகிலாக்கண்டி.
- தர்மகர்த்தா.

(33896)(34-21-19-13)


**எழுதுமட்டுவாழ் குடியிருப்பாளருக்கு!**

எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவைச்சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

இப்பிரிவுக் குடியிருப்பாளர்கள் தமது குடும்ப விவரங்களுடன் அங்குள்ள தமது காணியின் உறுதியின போட்டோ பிரதியினையும் எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவிலுள்ள குடியிருப்புகளை உரிமையாளர்கள் கடந்த திங்கள்முதல் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)


# கூறுவிலை கோரல்

வேலைத்திட்டம்: மருதனார்மடம் விழிப்புலன் அற்றோருக்கான வாழ்வகத்தில் புதிய இருமாடி விடுதிக்கட்டடத்திற்கான DPC மட்டம் வரைக்குமான வேலை

வேலை வழங்குபவர்: மருதனார்மடம் வாழ்வகத்தின் நிர்வாகசபை

மதி உரைஞரும் வேலை மேற்பார்வையாளரும்:
உருத்திரா பொறியியல் கட்டிடக்கலை மதியுரையகம்.

கூறுவிலை கோரலின் தன்மை: வேலைக்கான நுகர்வுப்பொருள்கள் யாவும் வேலை வழங்குபவரினால் வழங்கப்படும். வேலைக்கான கூலியும் அதற்கான ஆயுத தளபாடங்களும் கூறுவிலையினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மீளளிக்கப்படாத பணம்: ரூபா 250.00

விவரங்கள் பெறப்படவேண்டிய இடமும் காலமும்: உருத்திரா பொறியியல் கட்டிடக்கலை மதியுரையகம் 13.07.2004 தொடக்கம் 17.07.2004 வரைக்கும் காலை 9.00 - நண்பகல் 12.00 வரையில்

கூறுவிலை திறத்தல்: மதியுரைஞர் காரியாலயத்தில் 31.07.2004 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு

கூறுவிலை சமர்ப்பிக்கவேண்டிய இடம்: **பிரதான நிர்வாக அதிகாரி ,**
**உருத்திரா பொறியியல் கட்டிடக்கலை மதியுரையகம்,**
**06, நல்லூர் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.**

(33926)(40-21-13-19)



# அந்தியேட்டி அழைப்பு



அமரர்

## கந்தையா வேலுப்பிள்ளை

(இராசையா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11-09-1924 | 11-06-2004 |

11. 06. 2004 அன்று காலமான எமது குடும்பத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (11. 07. 2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
- குடும்பத்தினர்.

"பிரதீபம்",
கச்சாய்வீதி,கொடிகாமம்.

(சி-36256)(34-13-21-19)



# வெளிக்கள உத்தியோகத்தர்

நாட்டின் வடக்கு /கிழக்குப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது, பால் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி/ சேகரிப்புத் துறைகளில் சேவைபுரிய, 35 வயதுக்குட்பட்ட விவசாயப்பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்பட்டோர். கொழும்பில் பயிற்றுவிக்கப்பட்டபின் வடக்கு/கிழக்குப் பிரதேசங்களில் வெளிக்கள சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

தகுதியுடையோர் 24.07.2004 க்கு முன்னர் ஆங்கில மொழியில்விண்ணப்பிக்கவும்.jobs@cargillsceylon.com என்னும் மின் அஞ்சல் முகவரி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

SINCE 1844

Manager Employees Relations
**CARGILLS (CEYLON) LIMITED**
No. 40, York Street, Colombo 01.
www.cargillsceylon.com



HND HND
Delivered Locally...... Recognised Globally

# Edexcel International, UK

# BTEC HND

World Class Qualifications

## HND Leads to BSc. (Hon.)

Delivered Locally....... Recognised Globally

**New Batch Starts on 14.07.2004 at 10.00 a.m.**

**கணனித்துறையில் பட்டப்படிப்**

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினை தொடரமுடிம்..

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC END (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதாரரீதியாக நன்மை அடையமுடியும்

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது,

மேலதிக விபரங்களுக்கு 021 – 2222831 ∴ 021 – 2226933 அல்லது இல.100. மணிக்கூட்டுக்கோபுர வீதி. அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

**ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்**

**Institute of Informatics Studies ( IIS )**
" An Edexcel Approved Training Centre"


100, Clock Tower Road, Jaffna
Email: iis@sltnet.lk T.P No: 021 222 2831 / 021 2226933

# உலக உணவு விவசாய நிறுவனத்தின் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்வு

## யாழ். மேலதிக அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை10

குடாநாட்டில் உலக உணவு விவசாய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக அந்நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.



மேலதிக அரச அதிபரைச் சந்தித்தபோது.... (படம்: வசந்தன்)

உலக உணவு விவசாய நிறுவனப் பிரதிநிதி மசினர் யுசொவ், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கே.பி.சுகதபால ஆகியோரே தமது நிறுவனத்தின் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜி.ரி.இசற்றின் அனுசரணையுடன் தமது நிறுவனம் மீன்சந்தைப்படுத்தல் திட்டத்தை யாழ். குடாநாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது என்றும் -

எதிர்காலத்தில் படகுத் துறைமுகங்களை விஸ்தரித்தல், ஆழ்கடல் சம்பந்தப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கடற்றொழிலாளர்களுக்கான நுண்கடன்களை வழங்குதல், பனிக்கட்டித் தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் கடல்வளங்களை ஆய்வு செய்தல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் - நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி வேலைத்திட்டங்கள் தொடர்பான சாதக, பாதக நிலைமைகளை ஆராய்ந்த தாம், ரோமில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தின் அனுமதியை எதிர்பார்ப்பதாகவும் -

அனுமதி கிடைத்ததும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் - மேலும் கூறப்பட்டது.

(எ-5-203-204)

### சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை10

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் (2003) நடத்தப்பட்ட முறைசாராக் கல்வித்திட்டப் பயிற்சி நெறியில் பங்குபற்றிச் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் 17ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கச்சாய் அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நடத்தப்பட்ட தட்டச்சு, சிகை அலங்காரமும் ஒப்பனையும், உடை அமைத்தல், கணனி ஆகிய பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-117)

### பொதுக்கூட்டம்

தென்மராட்சி,ஜூலை10

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவர் சி.சிவஞானசுந்தரம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (எ-117)

### தொலைநகல் சேவை அஞ்சலகத்தில் ஆரம்பம்

தென்மராட்சி,ஜூலை10

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் தொலைநகல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் அலுவலகத் தொலைபேசி இணைப்புடன் தொலைநகல் இயந்திரம் பொருதப்பட்ட போதிலும் அதற்குரிய காகிதாதிகள் கடந்த வாரம் வந்துள்ளதால் தொலைநகல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# காலாவதியான உணவுப்பொருள்கள் புதுக்குடியிருப்பில் மீட்கப்பட்டு அழிப்பு

கிளிநொச்சி,ஜூலை10

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும், பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து காலாவதியான பழுதடைந்த நிலையில் இருந்த பொருள்களைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

இதுதொடர்பாக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி மேலாளர் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து கடந்த செவ்வாய், புதன்கிழ்மைகளில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வாணிப நிலையங்கள் மற்றும் மருந்தகங்களைப் பார்வையிட்டு பரிசோதித்த அதேசமயம் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான பீஸ்கட் வகைகள், மாஜரின், குழந்தைகளுக்கான பால்மா உணவு வகைகள், இனிப்பு வகைகள், சோயாமீற், அரிசி, தேயிலை, பப்படம், மிக்சர் வகைகள், 'டிப்பி டிப்பி' மற்றும் மருந்து வகைகள் உட்படப் பல பொருள்கள் வாணிபர்களின் பூரண அனுமதியுடன் எடுத்து அழிப்புச் செய்யப்பட்டன.

எனவே, நுகர்வோராகிய மக்களை இது தொடர்பாக பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது பொருள்களின் காலாவதித் திகதி, விலை மற்றும் பழுதானவற்றைத் தீர ஆராய்ந்து பெற்றுக்கொள்ளுமாறு நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் மக்களைக் கேட்டுக்கொள்கின்றனர் - என்றுள்ளது. (எ-3)

# பிரபா, பொட்டுஅம்மானை ஒப்படைக்கக் கோரவில்லை

## இந்தியத் தூதரகம் மறுப்பு

கொழும்பு,ஜூலை10

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரனையும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மானையும் ஒப்படைக்கும்படி இந்தியா கோரியிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை (உதயனில் அல்ல) இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது.

மேற்படி இருவரையும் ஒப்படைக்கும்படி இந்தியா, முறைப்படி இலங்கை அரசைக் கேட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை என்று பிரதித் தூதுவர் மோகன்குமார் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய அரசிடமிருந்து அப்படியான ஒரு கோரிக்கை வரவுமில்லை. இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென்னும் அதுபற்றி அறிக்கை எதையும் வெளியிடவில்லை என்று பிரதித்தூதுவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அண்மையில் இந்தியா புதுப்பித்துள்ளது. ஒருவேளை இங்குள்ள பத்திரிகைகள் இந்த இரண்டு விடயங்களையும் ஒன்றாக நினைத்துக் குழப்பமடைந்திருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ப)

# அரச காணிகளைப் பெறுவது எப்படி?

அரச காணிகளைப் பயன்பாட்டுக்காகப் பெற்றுக்கொள்வது எப்படி என்பது தொடர்பான விளக்கங்களைத் தொகுத்துத் தருகிறார் வடக்கு - கிழக்கு மாகாண செயலாளரும், முன்னாள் மாகாணக் காணி ஆணையாளருமாகிய சொ.அமிர்தலிங்கம். பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய அவரது கட்டுரையின் இறுதிப் பகுதி இது.

**சொ.அமிர்தலிங்கம்**

பின்னுரித்தாளி ஒருவரை நியமிக்க முடியாது. வாழ்க்கைத்துணை இறந்ததன் பேரில் அல்லது மறுதிருமணத்தின் பின்னர் இக்காணிக்குப் பின்னுரித்தாளி அல்லது 3ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒருவர் உரிமையுடையவராவார். காணியின் உரிமைக்காரர் இறந்து ஆறுமாத காலத்திற்குள் பின்னுரித்தாளி ஒருத்தர் அக்காணிக்கு உரிமைகோர மறுப்பாராயிருந்தால் அல்லது காணியில் ஆட்சியை எடுக்கத் தவறுவாராயிருந்தால், அவர் அக்காணிக்கான பின்னுரிமையை இழந்தவராகக் கருதப்படுவார். காணி உரிமையாளர் ஒருவர் இறக்கும்பொழுது அவரது வாழ்க்கைத்துணை இல்லாதிருப்பின் அல்லது வாழ்க்கைத்துணை இருந்தும் காணிக்கான உரிமையைக் குறிப்பிட்ட காலத்தில் கோரத்தவறும் பட்சத்தில் அத்திகதியிலிருந்து ஆறுமாத காலத்தினுள் பின்னுரித்தாளி ஆட்சியைப் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அக்காணிக்கான உரிமையை அவர் இழந்தவராவார். மேற்கூறிய இரு சந்தர்ப்பங்களும் ஏற்படும் பட்சத்தில் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்ட அடிப்படையில் காணி உரிமை சென்றடையும். இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவரோ முறைப்படி நியமிக்கப்பட்ட பட்சத்தில் அவர்களில் எவராவது இறக்கும்பொழுது அல்லது குறிப்பிட்ட காலத்தினுள் அக்காணி உரிமைக்கு ஆட்சிப்பொறுப்பை ஏற்கத்தவறும் பட்சத்தில் அவருக்குரிய உரிமைகள் ஏனைய பின்னுரித்தாளர் மீது சென்றடையும். மேற்கூறப்பட்ட முறைகளில் காணி உரிமைகளை பின்னுரித்தாளர்களோ வாழ்க்கைத்துணையோ பெறத்தவறும் பட்சத்தில் அரசு இத்தகைய காணிகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளும். எனினும், 3ஆவது அட்டவணையில் உள்ள எவராவது இதற்கு உரிமை கோரவில்லை என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். பிரதேச செயலாளரின் முன்னனுமதியுடன் உத்தரவுப்பத்திர அல்லது காணிக்கொடையின் உரித்தாளி ஒருவர் அந்த உத்தரவுப்பத்திரத்திற்கு உரித்தான காணியைக கூட்டுறவுச் சங்கக் கட்டளையின் கீழ்ப் பதிவு செயயப்பட்ட, தான் உறுப்பினராக உள்ள ஏதாவது சங்கத்திற்கு ஈடுவைக்கலாம். கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் உத்தரவுப் பத்திரதாரர் ஒருவர் தனது உத்தரவுப்பத்திரத்திற்குரிய காணியைப் பொறுப்பேற்குமாறு கோரலாம். சுகயீன காரணமாகக் காணியில் அபிவிருத்திகளைச் செய்யமுடியாமை, முறையான பின்னுரித்தாளர் இல்லாமை, விசேட காரணத்தின் நிமிர்த்தம் பிள்ளைக்கு மாற்றிக்கொடுப்பது இப்படியான சந்தர்ப்பத்தில் இவரது உத்தரவுப்பத்திரம் இரத்துச்செய்யப்பட வேண்டுமென்று பிரதேசச் செயலாளர் கருதும்பொழுது அல்லது வேறு ஒருவருக்கு மாற்றப்படவேண்டும் என்று கருதும்பொழுது அதற்கான அனுமதியை மாகாணக் காணி ஆணையாளரிடமிருந்து சட்டத்தின் பிரிவு 20 (அ)வின்கீழ் பெற்றுக்கொண்டு மாற்றம் செய்வதுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தினை மீளப் பெற்றுக்கொண்டு இரத்துச் செய்தல்வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் உத்தரவுப்பத்திரத்தில் திருத்தங்கள் செய்து வழங்கப்படக்கூடாது. தனது வகுப்பிற்கு உரித்துடையதல்லாத மேல் வருமானம் உடைய ஒருவருக்குக் காணியை மாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்கும்பொழுது அத்தகைய விண்ணப்பங்களைப் பரிசீலனைக்கு எடுக்கும்பொழுது சம்பந்தப்பட்ட காணி உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கவனத்திற்கொள்ளவேண்டும். அதே நேரத்தில் இக்காணி மாற்றத்தினால் உத்தரவுப்பத்திரதாரர் எதுவித பொருளாதார பாதிப்பிற்கும் உள்ளாகமாட்டார் என்பது பற்றித் திருப்திப்படுத்தல் வேண்டும். மேலும் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்பெல்லைக்குள் இது அடங்குவதாகவும் இருத்தல் வேண்டும். பிரதேச செயலாளரின் முன்னனுமதி பெறப்படுதல் வேண்டும. 03 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் அல்லாத ஒருவருக்குக் காணி கொடை மாற்றப்படுவதாகவிருந்தால் அத்தகைய நபர், எவ்வகுப்பைச் சேர்ந்தவருக்கு அந்தக் காணி வழங்கப்பட்டதோ அதே வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். காணிக்கொடை மாற்றமானது நொத்தாரிசு மூலமாகச் செய்யலாம். எனினும், இதற்கான அனுமதியைப் பிரதேச செயலாளரிடம் 03 பிரதிகளில் பெற்று, இரு பிரதிகள் கொடைக்கு உரித்தாளரிடம் கையளிப்பதுடன் 03 ஆவது பிரதி நொத்தாரிசினால் எழுதப்பட்ட உறுதி பதியப்படுவதற்காகக் காணியைப் பதியும் அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இருப்பினும், இவ்வாறு நொத்தாரிசினால் எழுதப்படுவதற்கு முனனர், வரைவு உறுதியொன்று தயாரிக்கப்பட்டுக் காணிக்கொடையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்தபின்பே பிரதேச செயலாளர் அனுமதியை வழங்கவேண்டும். பிரதேச செயலாளரின் அனுமதியின்றி எழுதப்பட்ட எந்த உறுதியும் செல்லுபடியாகாது. காணிக்கொடை வழங்கப்பட்ட காணியை அரசஈட்டு வங்கிக்கோ அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கோ இலங்கைத் தேசிய சேமிப்பு வங்கிக்கோ, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கோ, தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கோ அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கோ அடைமானம் வைக்கலாம. காணிக்கொடையில வழங்கப்பட்ட காணியை உரிமைக்காரர் பிரதேச செயலாளரின் அனுமதியின் பேரில் வருடம் ஒன்றுக்கு மேற்படாத காலம் ஒன்றுக்குக் குத்தகைக்குக் கொடுக்கலாம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குத்தகைக்காரரோ உரிமை மாற்றப்படுபவரோ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். இதன் நோக்கம் என்னவென்றால், பிரிக்கப்பட்ட காணித்துண்டானது பொருளாதார ரீதியில் நன்மைஅளிப்பதாக இருத்தல் வேண்டும். எனவே, உபபிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்ற காணியின் அலகு ஆகக்குறைந்த துண்டாக எந்த அளவில் இருக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும். உத்தரவுப் பத்திரமொன்று வழங்கப்படும்போது உபபிரிவுகளாகப் பிரிக்கப்படவேண்டிய அலகு எப்படியிருக்கவேண்டும் என்ற நிபந்தனை உத்தரவுப பத்திரத்தின் 4ஆம், 6ஆம் நிபந்தனைகளில், குறிப்பிடப்பட்டுள்ளது. காணி பிரிக்கப்பட வேண்டிய அலகுமுறை கீழே தரப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதி கொண்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டகாணி $1\frac{1}{2}$ ஏக்கர், நீர்ப்பாசன வசதி கொண்ட சிறிய நீர்ப்பாசனத் திட்ட காணி 1 ஏக்கர், வர்த்தகப் பயிர்கள் (தேயிலை, இறப்பர், தெங்கு முதலி யன) 2 ஏக்கர், மத்திய வகுப்புத் திட்டத்திற் கான மேட்டுநிலக் காணிகள் 5ஏக்கர், மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன வசதி கொண்ட காணி $2\frac{1}{2}$ ஏக்கர், குடியேற்றக் கிராம விஸ்தரிப்புத் திட்டத்திற்கான மேட்டுநிலக்காணி $1\frac{1}{4}$ ஏக்கர். ஒரு காணியை ஆகக்குறைந்த அளவில் பங்கிடுவது அக்காணியின் மொத்த விஸ்தீரணத்தைக் கொண்டு அளவிடப்படவேண்டும். உதாரணமாக ஒரு காணியின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கராக இருக்கும்பொழுது அதன் உபபிரிவு 2 ஏக்கராக இருந்தால் அக்காணி பிரிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த துண்டு $\frac{1}{2}$ பங்காகும். இதேபோன்று, 5 ஏக்கராக இருக்கும்பொழுது அதன் உபபிரிவு $1\frac{1}{2}$ ஏக்கராக இருந்தால் அக்காணி பிரிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த துண்டு 1/3 ஆகும். காணி அபிவிருத்திச் சட்டத்தின் 106 தொடக்கம் 118 வரையிலான பிரிவுகள் உத்தரவுப்பத்திரம் ஒன்று இரத்துச் செய்யப்பட வேண்டுமா னால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றித் தெளிவுபடுத்துகின்றது. காணி உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரதாரரால் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் உத்தரவுப்பத்திரத்தை இரத்துச் செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதற்கான அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், இரத்துச் செய்வதற்கான தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் முறைப்படியாக விசாரணைகள் நடத்தப்பட்டு அதன் அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் இரத்துச் செய்தல் மூலம் பாதிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரதாரர் பிரதேச செயலாளரின் தீர்மானத்திற்கு எதிராகக் காணி அபிவிருத்திச் சட்டத்தில் 113ஆவது பிரிவின் கழ்க் காணி ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்யலாம். ஆணையாளர் / மாகாணகாணி ஆணையாளர் இதுபற்றி மேல் முறையீடு செய்து தனது தீர்மானத்தைக் காணி அபிவிருத்திச் சட்டத்தின் 115, 116 பிரிவின் கீழ் வழங்குவார்.

(முற்றும்)

# மீண்டும் ஒரு போராட்டத்தின் மூலமே நாம் தமிழீழத்தைப் பெறமுடியும்!

## முன்னாள் எம்.பி.சந்திரநேரு தெரிவிப்பு

நிந்தவூர்,ஜூலை10

"இன்றைய அரசின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. மீண்டும் ஒரு போராட்டத்தின் மூலமே நாம் தமிழீழத்தை அமைக்கமுடியும்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.

ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கரும்புலிகள்தின பிரதான பொதுக்கூட்டத்தில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் மாவட்ட மகளிர் பிரிவைச் சேர்ந்த இசைப்பரிதி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சிங்கள அரசுகளைப் பேச்சுகளுக்குக் கொண்டு வருவதற்கு முக்கியகாரணமாக அமைந்தது கரும்புலித் தாக்குதல்களேயாகும். இன்னும ஆயிரக்கணக்கான கரும்புலிகள் களத்திலிருக கிறார்களென்பதைத் தெற்கு அரசியல்வாதிகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

தம்முயிரை ஈழவிடுதலைக்காக அர்ப்பணித்த 261 கரும்புலிகளின் சாதனை சிங்கள அரசுகள பேச்சுக்களுக்கு வரும் நிலையை ஏற்படுத்தியது. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், இன்னும் உருப்படியாக எதுவும் நடந்து முடிவுறவில்லை; முடிவுபெறவும் மாட்டாது.

சந்திரிகா அம்மையார் நினைத்திருந்தால் அன்று தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கலாம். அன்று ஜே.வி.பியோ வேறு எதுவுமே இல்லாமல் தனியே அவர் கையில் ஆட்சி இருந்தது.

இன்று சந்திரிகா அரசு அரைகுறை ஆட்சியுடனிருக்கின்றது. அதிலும் அம்மையார் ஒரு பேச்சு. அவருடைய ஆட்சியிலிருக்கும் கதிர்காமர் ஒவ்வொரு இடத்திலும் முன்னுக்குப் பின் முரணான பேச்சு எனப் பேசிக் கொண்டு திரிகிறார்கள்.

சந்திரிகா அம்மையார் பேச்சுக்களுக்குத் தயாராக வந்துள்ளதுடன், இடைக்கால நிர்வாகம் தரவும் சம்மதம் கூறியிருக்கின்றார்.

ஆனால், ஜே.வி.பியினரோ இன்று நாமே ஆட்சியமைத்துள்ளோம். சந்திரிகா அம்மையார் விரும்பியவாறு செய்ய முடியாதென மார்தட்டுகின்றனர்.

இதை நோக்கினால் திட்டமிட்ட நாடகமொன்றே நடப்பது போல் தெரிகிறது. நான ஆம் என்று சொல்கிறேன். நீங்கள் குழப்பிக் கொண்டிருங்கள் எனச் சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியிடம் கூறியிருப்பார். அதுதான் இன்று நடக்கின்றது.

கடைசிவரையும் இன்றைய ஆட்சியில் நமக்கு இடைக்கால நிருவாகம் கிடைக்கவே மாட்டாது.

சமாதானத்தைக் குழப்புவது ஜே.வி.பி.மட்டும் தானென நாம் நினைத்தால் இன்று ஹெல உறுமயவும் அதைவிட மோசமாகச் சமாதானத்தைக் குழப்பிக் கொண்டிருக்கின்றது.

இன்னும் தமிழ் மக்களின் உரிமைப்போராடடத்திற்கு எதிராக எத்தனை உறுமயக்கள் வருமோ தெரியாது. நாளுக்குநாள் தமிழ் மக்களின் உரிமைக்கு எதிராகப் படுமோசமான முறையில் எதிர்ப்புக்கள் இந்த ஆட்சியில் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.

நிச்சயமற்ற இன்றைய ஆட்சியில் நமக்கு உரிமை கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

மீண்டும் ஒரு போராட்டத்தின் மூலமாகவே நாம் தமிழீழத்தை அமைக்க முடியும் என்பதை நான் ஆணித்தரமாகக் கூறவிரும்புகின்றேன் - என்றார் (க)

## 6 மாகாண சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு இன்று

ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு இன்று சனிக்கிழமை ஒரே நாளில் நடைபெறவுள்ளது. மேல், தென், ஊவா, சப்பிரகமுவ, வடமத்திய, மத்திய மாகாண சபைகளுக்கான வாக்களிப்பே நடைபெறவுள்ளது.

23 அரசியல் கட்சிகளும், 4 சுயேச்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவடைநதன. பிரசார காலத்தில் பாரிய வன்செயல்கள் நடைபெற்றதாக முறைப்பாடுகள் செய்யப்படவில்லை.

இந்தத் தேர்தலில் 95 லட்சத்து 81 ஆயிரத்து 331 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். தேர்தலை கண்காணிக்க 5 தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்குத் தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பு (பவ்ரல்), தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் (சீ.எம்.ஈ.வி), மனித அபிவிருத்தி நிலையம், நெமெக் ஆகிய அமைப்புக்களே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளன. வாக்களிப்பு நிலையங்களுக்குள் சென்று கண்காணிப்பில் ஈடுபட பவ்ரல் மற்றும் சீ.எம்.ஈ.வி. அமைப்புக்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

6 மாகாணசபைகளுக்கும் ஒரே தடவையில் தேர்தல் நடத்துவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## மின்னிணைப்பு வழங்கப்படவில்லை; மக்கள் விசனம் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜூலை10

பளைப் பிரதேசத்தின் சில பகுதிகளுக்கு மின் விநியோகத்திற்கான வேலைகள் பூர்த்தியடைந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பெரியபளை, புலோப்பளை, பளைநகரம், தர்மக்கேணி, முகமாலை சோதனை நிலையங்கள் போன்ற இடங்களுக்கு மின்விநியோகம் வழங்குவதற்கான வேலைகள் முடிவடைந்ததுடன இப்பகுதிகளுக்கு மின்விநியோகத்திற்கான மின மாற்றிகளும் முகமாலை, பளை நகரம் ஆகிய இடங்களிலும் பொருத்தப்பட்டன.

ஆனால், சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை. இதனால், வீட்டு மின்னிணைப்பு வேலைகளைப் பூர்த்திசெய்த இப்பகுதிப் பொதுமக்கள் பலர் மின்இணைப்புப் பெற மின்சாரசபை அலுவலகங்களுக்குத் தினமும் அலையவேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## மிருசுவில் வைத்தியசாலையில் இரண்டு நோயாளர் விடுதிகள்

தென்மராட்சி,ஜூலை10

மிருசுவில் ஆஸ்பத்திரியில் ஆண், பெண் நோயாளர் விடுதிகள் (வார்ட்டுக்கள்) இயங்கவுள்ளன.

பிரசவ விடுதியுடன் இயங்கி வந்த இந்த ஆஸ்பத்திரியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் கடந்த 1999 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தினை ஆண்கள் விடுதியாகவும் -

பிரசவ விடுதியின் ஒரு பகுதியினை பெண்கள் விடுதியாகவும் இயங்கவைக்க சுகாதார திணைக்களத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னோடியாக ஆண் பரிசாரகர் உட்பட ஊழியர்களை இந்த ஆஸ்பத்திரிக்கு நியமனம் செய்யும் நடவடிக்கையினைச் சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மகப்பேற்று நிலையத்துடன் மத்திய மருந்தகமாக இயங்கி வந்த இவ்வைத்தியசாலையைத் தரம் உயர்த்த மாகாண சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## வாழைகளுக்குக் குருத்தடைப்பு நோய்

கோப்பாய்,ஜூலை10

கோப்பாய் நீர்வேலிப் பகுதி வாழைகளில் பெருமளவில் குருமன், குருத்தடைப்பு நோய் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பும் இவ்வாறான நோய்த்தாக்கம் அவதானிக்கப்பட்டதாகவும் -

தற்போது இவ்வருடமே பெருமளவில் வாழைகளுக்கு இந்நோய் பரவியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வாழைச்செய்கையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

காலநிலை மாற்றமே இவ்வாறான நோய்த் தொற்றுக்கு காரணம் எனவும் -

நோய்கண்ட வாழைகளை முற்றாகப் பிடுங்கி அகற்றி எரிப்பதன் மூலம் ஏனையவற்றிற்கு இது பரவிக்கொள்வதைக் குறைக்கலாம் எனவும் தெரிவித்தார். (எ-72)


**G.A.Q., 1st in Com.**

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
10.07.2004
விவரங்களுக்கு: S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
(33859) (24-13-21-17) ஆரியகுளம் சந்தி, யாழ்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**aat** Stage 1&2
கற்கைநெறிக்கான விரிவுரைகள் (English &Tamil)
ஆரம்பம்: Stage 1- 10.07.2004 சனிக்கிழமை காலை 8.00 மணி
Stage 11- 10.07.2004 சனிக்கிழமை காலை 11.00 மணி
வார நாள் வகுப்பு 12.07.2004 மாலை 3.00 மணி
மேலதிக விவரங்களுக்கு:
Director
Jaffna College Undergraduate Dept.
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி36282)(37-13-17)

**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)**
**இலவச கண்சிகிச்சை முகாம்**
இடம்: சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறியாலை மண்டபம்.
காலம்: 12.07.2004 திங்கட்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை.
மட்டக்களப்பிலுள்ள இல.16, வெஸ்லி வீதி, நியூ கண்டி மூக்குக் கண்ணாடி ஸ்தாபனத்தார் மூலமாக கண்களை இலவசமாகப் பரிசோதனை செய்யலாம். கண்ணாடி தேவையாயின் பெறுமதியில் 1/3 பகுதி முற்பணமாகச் செலுத்தி ஓடர் செய்யலாம்.
பொதுமுகாமையாளர்
க.இராசதுரை
சங்கானை ப.நோ.கூ.சங்கம்
(சி/36107) (40-13-17-21)

**To Let**
Modern newly built beautiful upstair house for rent or lease within the Jaffna Municipality Limits 1 Km from Nallur temple by the side of the road, suitable for foreigners, NGOS and Companies. The building is 2500 sq.ft situated in 25 perches of land. Two bedrooms, one with attached bathroom, kitchen, Servant's room, toilet and sitting room. In upstairs there are four bedrooms, a Common bathroom, Sitting room and a very large balcony. parking space available within the premises for more than ten vehicles.
Any further requirements will be done after consultation. Contact over telephone.
TELEPHONE: 0777 - 897795
077 - 062005
(33933)(34-13-17-21)


**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**




செல்வராஜா ~ இந்திரவதனம் தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**நந்தனாவதி**
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (10.07.2004) சனிக்கிழமை
தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பாமார்,
அம்மம்மா, ஏழாலை சுந்தர்லிங்கம் மாமா தம்பதிகள்,
கல்வியங்காடு கந்தசாமி மாமா தம்பதிகள்,
கொக்குவில் மேற்கு மங்களேஸ்வரி பெரியம்மா,
சதீஸ் அண்ணா, சகீலா அக்கா தம்பதிகள்,
பத்மாவதிப் பெரியம்மா தம்பதி,
சுவிற்ஸர்லாந்திலிருக்கும் சுரேந்திரன் ~ வசந்தா தம்பதி,
சின்னம்மா, ஜேர்மனியிலிருக்கும்
ரகுநாதன் ~ சர்மிலா அக்கா தம்பதி, நெதர்லாந்திலிருக்கும்
கிருபாகரன் ~ சங்கீதா அக்கா தம்பதி,
இத்தாலியிலிருக்கும்இராசஇராசேஸ்வரன் சரஸ்வதி தம்பதி,
கனடாவிலிருக்கும் முருகேசு இந்திராணி தம்பதிகள்
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(33921) (24-13-19)

தகவல்: தி.செல்வராஜா- அப்பா.


NIS Sparta
ITeS ACADEMY
enabled
by cyberSKILLS
Do You Want a Job in
Asia's Fastest Growing Sector?
Do you have the skills to Get your dream job?
Does your certificate do You justice?
Are you fluent enough In the English language?
ICT Agency accredited
ITeS
Training Centre
ITeS Academy has joined hands with NIS Sparta,
Asia's Leader in ITeS Training, to Give You
The Best and make you the best
Language Training
Basic IT Skills
Team Building
Customer Service
Telephony Skills & Etiquette
Life Skills
US Geography/ Culture
Client Contact Centre Environment
Influencing & Persuading Skills
There are vast job opportunities in ITeS with the experience of Asia's largest training solutions company. We provide you with skill-based training. This job-oriented program will enable you to succeed in the ITeS industry. We assure you placement, so you can obtain your dream
Job with a Salary you desire just in 3 months
Free Seminar
Date : 11of July 2004 (Sunday) 9.30 A.M
Place: Vembadi Girls' High School
Organised by
NIIT 347, Kasthuriyar Road
Jaffna 021 222 7250
ITeS ACADEMY
enabled
NIS Sparta
12 ½ Nawala Road, Nugegoda 011 2828857

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 19.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33931)

ஜன்மார் டீசல் 2 சிலிண்டர் எஞ்சினோடு வள்ளமும் (Neilmarine - Plastic) வழிச்சல் வலைகளும் (4¾", 5") விற்பனைக்குண்டு. தொடர்பு:ந.விஸ்வநாதன்பிள்ளை, நெடியகாடு, வல்வெட்டித்துறை.தொ.இல.:0777079521, 021-4590200. (33945)

இரண்டு மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:132, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (33955)

## பொதுக்கிணற்றை துப்புரவு செய்ய ஏற்பாடு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் கிணற்றை இறைத்து துப்புரவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதேவேளை, இவ்வைத்தியசாலைக்குச் செல்லும் காடாப்புலம் வீதியை துப்புரவுசெய்யும் பணியிலும் பிரதேசசபை ஊழியர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். வீதியின் இருபக்கங்களிலுமுள்ள முட்பற்றைகள், செடிகள், புல் பூண்டுகள் ஆகியன துப்புரவுசெய்யப்பட்டு வருகின்றன. (ஐ-135)

## கூரையிலிருந்து தவறிவீழ்ந்து காயம்

வீட்டுக்குப் புதிதாக மின்சார இணைப்பு வேலை செய்துகொண்டிருந்தவேளை கூரையின் உட்பக்க சீற் மரத்திலிருந்து தவறிவீழ்ந்து ஒருவர் தலையிலும், கால்களிலும் படுகாயமடைந்தார். அராலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செல்வராசா ஜெயக்குமார் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-15)


### விற்பனைக்குண்டு

புறொயிலர், லேயர் ஒருநாள் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
தொலைபேசி இல. 060 221 2926
(சி-36250)

### ஆள் தேவை

எமது நிலையத்துக்குக் கணனி அறிவுள்ள ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:
**வீடியோ விஷன்**
இல.05, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel.:077 6094934 (செந்தூரன்)
(33963)


### முதலாம் ஆண்டு நினைவுகளுடன்



**வேலுப்பிள்ளை பொன்னையா**

திதி: 10.07.2004 சனிக்கிழமை

| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 24-11-1936 | 23-06-2003 |

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சித்திரமாய்
வாழ்ந்த எம் அப்பாவே! நீங்கள் மறைந்து
ஆண்டொன்று சென்றதப்பா -
இன்னமும்
ஆறவில்லை எம் துயரம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
மகன் (குமார்),
மருமகள்,
பேரப்பிள்ளை.

மருதங்கேணி தெற்கு,
தாளையடி.
(33905)(34-19-17)

உ
சுன்னாகம்

## ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்
## ஸ்ரீ சொர்ணாம்பிகை தேவி அம்பாளின்
## ஆடிப்பூர மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

12.07.2004 திங்கட்கிழமை ஸ்ரீ சொர்ணாம்பிகை தேவி அம்பாளின் கொடியேற்ற உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

### விசேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | 12.07.2004 திங்கள் காலை 10மணி |
| சுமங்கலித் திருவிழா | : | 17.07.2004 சனி மாலை 3மணி |
| சப்பறத் திருவிழா | : | 19.07.2004 திங்கள் மாலை 7மணி |
| தேர்த் திருவிழா | : | 20.07.2004 செவ்வாய் மாலை 7மணி |
| தீர்த்தத்திருவிழா | : | 21.07.2004 புதன் காலை 10மணி |

கிரியாகலாப மணி
Dr.சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள்
M.I.H.Dip.(India) D.Lit.(Japan)
தேவஸ்தான பிரதம குருக்கள்.

ஸ்ரீகதிரமலை
சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.(சி-36283)(34)

## கூட்டுறவுச் சங்கத்தின் புதிய திட்டம்

பண்டத்தரிப்பு பல நோ.கூட்டுறவுச்சங்கம் மொத்தவியாபார நடவடிக்கையை அதிகரிக்கச்செய்யும் பொருட்டு புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

சங்கத்தின் கிளைகளில் அதிகளவில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு வருட இறுதியில் நுகர்ச்சிப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கும் நடைமுறையே தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப புதியதிட்டத்தால் சங்கக்கிளைகளில் நுகர்ச்சிப் பொருள்களின் விற்பனையை அதிகரிக்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர் திரு.ந.காராளசிங்கம்
(நல்லூர் பல நோ.கூ. சங்கப்பணியாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நடராசா பூமணி

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு, கண்ணீர் அஞ்சலி செலுத்தி அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

- கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை-நல்லூர் பல நோ.கூ.சங்கம்.

திருநெல்வேலி.
(33956)(42-34-19-17)


# London English College

**No. 105, Arasady Road, Jaffna**
**T.P : 021-222-5889, 0777252180, 0776303539**
**E-mail:- lecjaffnabranch@yahoo.com.**

## Listen Understand Speak

London ஐ தலைமையகமாகவும் உலகின் பல பாகங்களிலும் தனது கிளைகளைக் கொண்டதுமான BCNS நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் தனது கிளையினை ஆரம்பிப்பதில் மகிழ்வடைகின்றது. இதன் கற்பித்தல் வடிவமைப்பு Britsh முறையினைக் கொண்டதாக இருக்கும். இங்கு மாணவர்களுக்கான முழுநேர, பகுதிநேர, வாரஇறுதிநாள், சிறுவர்களுக்கான வகுப்புகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு பரீட்சைகள் நடத்தப்பட்டு திறமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும். இங்கு மாணவர்கள் கற்றலில் ஆர்வ மேற்படும் வகையில் கற்பித்தல் முறைகள் வகுக்கப்பட்டுள்ளதோடு, நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் இப்பயிற்சி வகுப்புகள் நெறிப்படுத்தப்படும்.



**Language Structure:-** இம்முறையூடாக மாணவர்களுக்கான ஆங்கில வாக்கிய அமைப்பு, பேச்சு வகுப்புகள், பகுதிரீதியான பரீட்சைகள் போன்றன நிறுவனத்தினால் நடத்தப்படும்.



**Listening:-** இங்கு கேட்டறிதல், உய்த்தறிதல் போன்ற பயிற்சிகள் ஒலி, ஒளி நாடாக்கள் மூலம் திரையிலும் விசேட கருவிகள் ஊடாகவும் கற்பிக்கப்படும்.

**Reading Comprehension:-** இம்முறை மாணவர்களின் வாசிப்புத் திறனை வளாப்பதுடன் மாணவர்களின் பேச்சாற்றலை ஊக்குவிக்கும் முகமாக நாடகங்கள், கவிதைகள், சிறுநிகழ்ச்சிகள் போன்றன நடத்தப்படும்.





**Speech and Computer:-** இங்கு மாணவர்களின் பேச்சாற்றலை ஊக்குவிக்கும் முகமாக (Work shop) பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுவதோடு, அடிப்படைக் கணனி பயிற்சியும் இலவசமாக வழங்கப்படும்.

**Discussion/Writing:-** மாணவர்களின் சிந்தனை வளர்ச்சி, எழுத்தாற்றல் என்பவற்றை வளர்க்கும் நோக்கோடு மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனி விடயங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரித்தல்.






**Educational Excursion:-** இங்கு மாணவர்கள் உள்ளூர் கல்விச் சுற்றுலாவுக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்பட்டு, அவ்விடங்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படுவதோடு, ஆங்கில மொழியாற்றலை ஊக்குவிக்கும் முகமாக இச்சுற்றுலா பற்றி சமூக/பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்கள் பற்றிய ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரித்தல்.

**Kids and Professional:-** சிறுவர்களுக்கான வகுப்புக்கள் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு அவர்கள் ஆர்வத்துடன் கல்விகற்கும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



**மேலும் உயர்பதவி நிலையில் உள்ளவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கில மொழியாற்றல் வகுப்புகளும் எம்மால் நடத்தப்படுகின்றன. அத்துடன், IELTS, TOEFL போன்ற வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.**

நிறுவனத்தினால் பின்வரும் கற்கைநெறிகள் நடத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | Certificate in English (Beginners)<br>கல்வித் தகைமை - 8 ஆம் வகுப்புக்கு மேல் | - 3 Months |
| 2. | Certificate in English (Intermediate)<br>கல்வித் தகைமை - G.C.E. (O/L) S | - 3 Months |
| 3. | Diploma in English<br>கல்வித் தகைமை - G.C.E. (O/L) C | - 3 Months |
| 4. | Advance Diploma in English<br>கல்வித் தகைமை - Diploma in English | - 3 Months |
| 5. | English Communication Skill for Professionals | |
| 6. | IELTS/TOEFL | |

★ சிறுவர்களுக்கான **Elementary** வகுப்புகளும் நடைபெறுகின்றன:


**The Secret of Success with L.E.C.**

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**BCNS** No. 229A, Mitcham Road, Tooting SW 17910 London U.K.

No. 105, Arasady Road, Jaffna. (சி-36277)(34)

# அமெரிக்க அதிபரை தெரிவு செய்ய மரதன் தேர்தல்



உலகில் சக்திவாய்ந்த பதவிக்கான போட்டி. இப்படி ஒரு சாரார் கூறுகின்றனர்.

பயங்கரவாதத் தலைமைப்பதவிக்கான போட்டி. இது அரபுலகத்தின் விமர்சனம்.

முதலாளித்துவ அதிபர் கதிரைக்கான போட்டி. கம்யூனிஸ்ட்களின் குமுறல் இப்படி எழுகிறது.

இவை அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலையே குறிக்கின்றன. எது எப்படியிருப்பினும், உலகில் அனைவர் கவனங்களையும் கவரும் தேர்தலாக இது அமைந்துள்ளது என்பதே யதார்த்தம்.

அமெரிக்காவின் அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமெரிக்க வாக்காளர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை வாக்களிக்கப் போகிறார்கள். இன்னும் அதற்கு 115 நாள்கள் அவர்கள் காத்திருக்க வேண்டும். ஆனால், அதிபர் தேர்தலுக்கான பிரசாரங்கள் இப்போதே சூடுபிடித்து விட்டன.

## தேர்தல் முறை

அமெரிக்க அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையானது உலகில் அதி சிறந்த பகிரங்க ஜனநாயக நடவடிக்கை என்று அமெரிக்க அரசியல் வாதிகள் பெருமையாகக் கூறிக கொள்கிறார்கள்.

ஆனால், பல நாடுகளில் அதிகம் போனால் சில வாரங்களில் அதிபர் தேர்தல் முடிந்து விடுகிறது. இந்த நிலையில் அமெரிக்க அரசியல் வாதிகளின் பெருமையை பிறநாட்டவர்கள் ஏற்கமறுக்கின்றனர். உலகில் நீண்ட - மரதன் தேர்தல் அது என்கின்றனர் அவர்கள். அடிப்படை நடைமுறை, சம்பிரதாயங்கள், பிரசாரம், வாக்களிப்பு எனக் கிட்டத்தட்ட 11 மாதங்கள் இழுத தடிக்கும் அமெரிக்க அதிபர் தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறுகிறது.

அதிலும் ஓர் ஆச்சரியம் 4 ஆல் வகுக்கும் போது மீதி வராத வருடத்திலேயே -லீப் வருடத்திலேயே அமெரிக்க அதிபர் தேர்தல் இடம் பெற்றுவருகிறது.

(கடந்த தேர்தல் இடம்பெற்ற 2 ஆயிரமாம் ஆண்டையும், தற்போதைய தேர்தல் இடம் பெறும் 2004 ஆம் ஆண்டையும் 4 ஆல் வகுக் கும்போது மீதி வராது).

## முதற்கட்டம்

தேர்தலில் முதறகட்டம் கட்சி வேட்பாளரைத தேர்ந்தெடுப்பதாகும். பெரும்பாலான நாடுகளில் கட்சியே தனது வேட்பாளரைத் தெரிவுசெய்து அறிவித்துவிடும். ஆனால், அமெரிக்காவில் ஒரு கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் கட்சி வெளியிடும் பிரமுகர்களின் பட்டியலில் இருந்து வாக்களிப்பு மூலம் தெரிவுசெய்வார்கள்.

அமெரிக்க அதிபர் தேர்தல் எப்போதும் நவம்பர் மாதத்திலேயே இடம்பெறும். ஆனால், கட்சி வேட்பாளரைத் தெரிவுசெய்வது உள்ளிட்ட அடிப்படை நடைமுறைகள் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுவிடும். இது மாகாண மட்டத்தில் இடம்பெறும். இந்த வேட்பாளர் தேர்வில் ஒரு கட்சியைச் சேர்ந்த பல பிரமுகர்கள் ஒருவருக கெதிராக மற்றவர்கள் பிரசாரம் செய்து அதிபா தேர்தல் வேட்பாளராக முயற்சிப்பார்கள்.

அத்துடன் கட்சி ஆதரவாளர்கள் அக்கட்சியின் தேசியக் குழுவுக்கான பிரமுகர்களையும் தெரிவுசெய்வார்கள். இந்தப்பிரமுகர்கள் ஒன்று கூடி மாகாண மட்டத்தில் தெரிவானவர்களில் ஒருவரை அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராகத் தெரிவுசெய்வார்கள். இந்தத் தெரிவு கோடைக்கால மத்தியில் இடம்பெறும். தேசிய குழுவில் இடம்பெற்றுள்ள பிரமுகர்களில் அதிக மானோரின் ஆதரவைப் பெறுபவர் வேட்பாளராக் அறிவிக்கப்படுவார்.

இதேவேளை- தேசியக் குழுவுக்கான பிரமுகர்களைத் தெரிவுசெய்ய வாக்களிப்பு முறை பரவலாகப் பின்பற்றப்பட்டாலும், ஐயோவா போன்ற சில மாகாணங்களில் கட்சியின் செயற்குழுப் பிரமுகர்களைத் தெரிவு செய்கிற முறையும் கடைப்பிடிக்கப்படுகிறது.


## தேசியக் குழு

கட்சியின் தேசியக் குழுக்கள் அமெரிக்க அரசியலில் பெரும் பங்களிப்புச்செய்யும் பாகங்களாகும். இந்தத் தேசியக் குழுக்கள் மண்டபம் ஒன்றில் கூடி அதிபர் தோதல் வேட்பாளருக்கான போட்டியாளர்களில் தமது ஆதரவு யாருக்கு என்று தெரிவிக்கின்றன. இந்த நிலையில் அதிபர் தேர்தல் வேட்பாளர் யார் என்பது பெரும்பாலும் கட்சிக்குள் தெரிந்துவிடும் மாகாணங்களிலிருந்து வந்த தேசியக் குழுக்களின் பிரமுகர்கள் சம்பிரதாயத்துக்காகவே அதிபர் தேர்தலுக்கான வேட்பாளரை அப்போது தெரிவுசெய்கிறார்கள். அதிக பிரமுகர்களின் ஆதரவு பெற்று அதிபர் பதவிக்கான குறிப்பிட்டகட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் தன்னுடன் போட்டியிட்ட தனது கட்சியின் சக உறுப்பினர் களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது வழக்கமானதாகும். அத்துடன் அவர் உபஅதிபர் பதவிக்கான வேட்பாளரை தெரிவு செய்து அறிவிப்பார்.

## பிரசாரம்

அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கண்ணியமான முறையில் பிரசாரத்தில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் பிரசாரம் தொடர்பான சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

வேட்பாளரின் கொள்கைகளே அவருக்கு ஆதரவை வழங்குவதற்கான அளவு கோலாக அமைகிறது. இந்த நிலையில் ஒருவரை ஒருவர் முடக்கும் - கவிழ்க்கும் - பிரசார நடவடிக்கைகளில் வேட்பாளர்கள் தீவிரமாக ஈடுபடுவார்கள். இந்தப் பிரசார நடவடிக்கைகள் மாகாணங்கள் தோறும் ஒன்றுக்கொனறு குறையாமல் இடம்பெறும். இதற்காக டொலர்கள் தண்ணீராகப் பாயும் தற்காலத்தில் இணையத் தளங்கள், தொலைக்காட்சிகள் உட்படத் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஊடான பிரசாரங்கள் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.



குறிப்பாக தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பாகும் வேட்பாளர்கள் இடையேயான விவாதங்கள் ஆதரவு திரட்டுவதில் பிரதான இடம் வகிக்கின்றன.

வாக்களிப்புத்தினம் நெருங்கும் இறுதி வாரங்களில் 'ஊசலாடும் மாகாணங்கள்' என்ற அடையாளம் காணப்படும் போட்டி வேட்பாளர் களுக்கு சமஅளவில் ஆதரவு இருக்கும் - மாகாணங்களில் முழுமூச்சுடன் பிரசாரம் மேற் கொள்ளப்படும். தேர்தலில் பல கட்சிகளும், சுயேட்சைகளும் போட்டியிடுவது வழக்கமாயினும், குடியரசுக் கட்சி வேட்பாளருக்கும், ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்கும் இடையே தான் அதிபர் பதவிக்கான போட்டி. இந்த இரு கட்சிகளுக்கும் ஊசலாடும் மாகாணங்களாக வாஷிங்ரன், ஒரேகன், நெவேடா, கொலரடோ, நியூமெக்ஸிகோ, அரிசோனா, மினசோட்டா, விஸ்கொன்சின், மிச்சிகன், பென்சில்வேனியா, ஐயோவா, மிசோரி, அர்கன்சஸ், மேற்கு வேர்ஜினா, புளோரிடா, ஒகியோ ஆகிய மாநிலங்கள் அமைந்துள்ளன.

## வாக்களிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வாக்களிப்பு தேர்தல் நடைபெறும் வருடத்தின் நவம்பர் மாதத்தில் வரும் முதல் திங்கட்கிழமைக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமையே எப்போதும் இடம்பெறும். 291 மில்லியன் அதாவது 29 கோடியே 10 லட்சம் சனத்தொகை கொண்ட அமெரிக்காவில் வாக்குரிமை பெற்றவர்கள் நாட்டின் அதிபரைத் தேர்ந்தெடுக்க அன்றைய தினம் வாக்களிப்பர். சாதாரணமாக வாக்களிப்பு முடிவடைந்து பன்னிரண்டு மணித்தியாலங்களில் முடிவு தெரிந்துவிடும்.

வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை தேர்வகக் குழுமங்களில் (Elecloral College) இடம்பெறும். தேர்வகக் குழுமத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும். அமெரிக்கக் குடியரசின் சட்ட சபையில் (Congress) மாகாணங்களின் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலேயே தேசியக் குழுமத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அமையும்.

எப்படியிருப்பினும், எல்லா மாகாணங்களிலும் அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் தேசியக் குழும உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற வராகின்றார்.


ஒரு வேட்பாளர் ஒருவர் தேசியக் குழும உறுப்பினர்களில் அதிகமானவர்களின் ஆதரவைப் பெற்ற உடனேயே பொதுமக்களைப் பொறுத்தவரை அதிபர் பதவிக்கான தேர்தல் முடிந்து விடுகிறது. ஆனாலும், தேர்வகக் குழு உறுப்பினர்கள் ஒன்றாகக் கூடி அதிபரைத் தெரிவு செய்ய வாக்களிப்பர். வாக்களிப்பில் வெற்றி பெற்ற வேட்பாளருக்கே வாக்களிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடெல்லாம் தேசியக் குழும உறுப்பினர்களுக்குக் கிடையாது. தத்தமது கட்சி விருப்பப்படி அவர்கள் வாக்களிக்கலாம்.

இவர்கள் அளிக்கும் வாக்குகள் அடுத்துவரும் ஜனவரி மாதத்தில் அமெரிக்கக் குடியரசின் சட்ட சபையில் சம்பிரதாயத்துக்காக எண்ணப்படும்.

## தீர்மானிக்கும் சக்திகள்

இத்தனை நீண்டகால நடைமுறைகளைக் கொண்ட அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலின் முடிவை தீர்மானிக்கும் சக்திகள் சில உள்ளன. அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தற்போதைய காலகட்டத்தில் அமெரிக்கத் தேசியத்தை அதன் பாதுகாப்பை - பயங்கரவாதத்தை - அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் தமது பிரசாரங்களை மேற்கொள கின்றனர்.

ஆனாலும் அமெரிக்கர்கள் செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் - பயங்கரவாதம் குறித துக் கவலைப்பட்டாலும்கூட, உள்நாட்டுப்பிரச் சினைகளுக்கே அவர்கள் அதிக முக்கியத் துவம் கொடுக்கிறார்கள் என்று கருதப்படுகிறது.




இந்த வகையில் முதியவர்கள்விடயம், சமூகப் பிரச்சினை, சிறுபான்மையினர் விவகாரம், தொழிற் சங்க நடவடிக்கைகள், சுற்றுச்சூழல், வரிகள் மற்றும் வரவுசெலவுத்திட்டம் போன்றவற்றில் வேட்பாளர்களின் கொள்கைகள் என்ற அடிப் படையில் ஆதரவு கூடிக்குறைகிறது.

## முதியோர் விடயம்

சுமார் 29 கோடியே 10 லட்சம் சனத்தொகை கொண்ட அமெரிக்காவில் 13 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் 65 வயதுக்கு மேறபட்டவர் கள். வாக்களிப்போரில் இவர்கள் கணிசமான எண்ணிக்கையினராவர். குறிப்பாக ஓய்வூதியர் கள் அதிபரைத் தீமானிக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளனர்.

ஓய்வூதியர்களுக்கான அமெரிக்க சங்கம் சுமார் 3 கோடி உறுப்பினர்களைக் கொண்டது. நாட்டின் பெரிய அமைப்புக்களில் இதுவும் கட்சிச் சார்பற்றது. ஆனாலும் அதிபர் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக இது உள்ளது.

## சமூகப்பிரச்சினை

அமெரிக்கர்களிடையே சமூகப்பிரச்சினை குறித்த விழிப்புணர்வு அதிகமாகவே உள்ளது. இந்த வருடத் தேர்தலில் சமூகப்பிரச்சினை குறித்த விடயம் அதிகமாகவே ஆதிக்கம் செலுத்தும் என்று நம்பப்படுகிறது. ஆனாலும் இப்போதைய இதுபற்றிய பிரசாரங்கள் நவம்பர் மாதம் வாக்களிப்பு இடம்பெறும்வரை வாக்காளரைக் கவர்ந்துவைத்திருக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனாலும் ஓரினச்சேர்க்கையாளர்கள் திருமணம் என்பது வேட்பாளர்களின் பிரசாரங்களில் முக்கிய இடம் வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் நிற, இன வேறுபாடு, குடும்ப உறவுகள் போன்றவற்றிலும் வேட்பாளர்கள் கூடுதல் அக்கறை செலுத்துவார்கள் என்று கருதப்படுகிறது.

## சிறுபான்மையினர்

ஸ்பெயினைப் பூர்வீகமாகக்கொண்ட 'ஹிஸ்பனிக்ஸ்' (HISPANICS) எனப்படுவோர் மூன்று கோடியே 80லட்சம் பேர் அமெரிக்காவில் வாழ்கின்றனர். சனத்தொகையின் 13 சதவீதம் பேர் இவர்களாவர். ஆபிரிக்க அமெரிக்கர்களின் எண்ணிக்கையை விட ஹிஸ்பனிக்குகள் அதிகமாவர். இவர்களே சிறுபான்மையினில் பெரிய இனக்குழுவினராவர். இவர்களில் 2 கோடியே 15 லட்சம் பேர் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள். இவர்களும் தேர்தலின் முடிவை தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளனர். இவர்களைத் தவிர ஆபிரிக்கர், அமெரிக்கர்கள், ஆசியர்கள் எனப் பல சிறுபான்மைக குழுவினரும் உள்ளனர். இநத சிறுபான்மையினரைக் கவரும் வகையில், வேட்பாளர்கள் பிரசாரம் மேற்கொள்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

## தொழிற்சங்கங்கள்

முதலாளித்துவ - பணக்கார - நாடான அமெரிக்காவில் தொழிற்சங்கங்கள் அரசியல் முடிவுகளை மாற்றும் சக்தி படைத்தவையாக உள்ளன. குறிப்பாக அமெரிக்கத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஒரு கோடியே 30 லட்சம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதில் 64 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இந்தத்தொழிற்சங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தில் வியாபித்துள்ளன.

## சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் விடயத்தில் பல லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் அக்கறைகாட்டுகின்றனர். ஆனாலும் சுற்றுச்சூழல் அமைப்புக்கள் அரசியல் பின்னணி கொண்டவை என்று பொறுப்புள்ள அரசியலுக்கான மையம் கூறுகிறது. பொதுவாக பாரிய தொழிற்சாலைகளை எதிர்க்கும் இத்தகைய அமைப்புகளில் சில தொழிலதிபர்களை ஆதரிப்பதை அந்த மையம் சுட்டிக்காட்டுகிறது.

ஆகவே, இந்த அமைப்புக்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் என்ற போர்வையில் அரசியல் முடிவைத் தீமானிக்கும் சக்திகளாக உள்ளன.

## வரிகள்

பணக்கார நாடான அமெரிக்காவின் வரவு - செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை நிதி - துண்டு விழும் தொகை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்ய புதிய வரிகள் விதிக்கப்பட வேண்டியுள்ளது. வரி வசூலிப்புக்கும், அரசின் செலவீனங்களுக்கும் இடையிலான வித்தியாசம் இந்த ஆண்டு 50 கோடியே 10 லட்சம் டொலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகை அமெரிக்கப் பொருளாதாரத்தில் 5 சதவீதமாகும். இந்த நிலையில் வரி மற்றும் வரவு - செலவுத்திட்டம் குறித்த விடயங்கள் அதிபர் தேர்தலில் ஆதிக்கம் செலுத துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விடயங்களைத்தவிர தன்னார்வக் குழுக்கள் தேர்தலில தாம் ஆதரிக்கும் வேட்பாளர் வெற்றி பெறப் பாடுபடுகின்றன. இந்தக் குழுக்கள் பன்னாட்டு நிறுவனத்தினர், தொழிலதிபர்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் நிதி மற்றும் ஆதரவுடன் செயற்படுகின்றன.

வேட்பாளர்களில் யார் அதிபரானால் தமக்கு இலாபம் என்று கணக்குப்போடும் பண முதலைகள் தன்னார்வக் குழுக்கள் ஊடாக குறிப்பிட்ட வேட்பாளர் வெற்றி பெறப் பணத்தை தண்ணீராகச் செலவு செய்கின்றன. இதன்மூலம் ஊடகங்கள் உட்படப் பலவிதங்களிலும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படி நீண்ட கால நடவடிக்கைகளின் ஊடாக இடம்பெறும் அமெரிக்க அதிபர் தேர்தலில் இம்முறை குடியரசுக்கட்சி சார்பில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் போட்டியிடுகிறார் ஜனநாயகக்கட்சி சார்பில் ஜோன்கெரி எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

# கால்வாய்ப்புண் நோயைக் கட்டுப்படுத்த தென்மராட்சியில் மாடுகளுக்குத் தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம்,ஜுலை10

மிருகங்களைப் பாதித்துவரும் கால்வாய்ப் புண் நோயைக் கட்டுப்படுத்தும் முன்நடவடிக்கையாக தென்மராட்சிப் பகுதியில் மாடுகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்த நோயினால் பீடிக்கப்பட்ட மாடுகள் தவிர்ந்த ஏனைய மாடுகளுக்கே இவ்வாறு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருவதாகவும் -

குறித்த நோயினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் மிருசுவில் வடக்குப் பகுதியிலேயே உள்ளன என்றும் -

திருநெல்வேலியில் அமைந்துள்ள மிருக வைத்திய புலனாய்வு நிலையத்தின் பொறுப் பதிகாரி எஸ்.புவிராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கால்வாய்ப்புண் நோய் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் இதுவரை ஐந்து கன்றுகள் உயிரிழந்ததுடன், மாடுகள் பலவும் இந்நோயின் தாக்கத்திற்குள்ளாகியுள்ளன.

மிருக வைத்திய நிலையங்கள் மேற்கொண்டு வரும் சிகிச்சை மூலம் தற்போது மேலும் கால வாய்ப்புண் நோய் பரவுவதைத் தடுக்க முடிகின்றது.

அவ்வாறு மிருகங்களில் கால்வாய்ப்புண் நோய் அறிகுறி தென்படுமாயின் உடனடியாக மிருக வைத்திய நிலையங்களுக்குச்சென்று உரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் - அவர் கூறினார். (எ-6)

# மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

யுனிசெவ் நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கல்வித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒவ்வொரு கோட்டங்களிலும் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம, மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன. அந்தந்தக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தமக்கு வசதிக்குரிய இடங்களில் போட்டியில் பங்குபற்றலாம்.

பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றமுடியும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றுவார்கள். அவ்வாறு தெரிவுசெய்யப் பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படும் என்றும் இத்திட்டத்தின் இணைப்பாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-6-13-117)

# யூரியா உரவிலை குறைப்பு

கொழும்பு,ஜுலை10

உரத்தின் விலையானது அதன் மீதான 'வற' வரி நீக்கப்பட்டதன் காரணமாக மேலும் குறைககப்பட்டுள்ளது.

தென்பகுதியில் ஒரு சாக்கு யூரியாவின் விலை அறுநூறு ரூபாவில் இருந்து 537 ரூபாவாகக் குறைந்திருக்கிறது. மற்றும் வேறு இரு உர வகைகளின் விலைகள் ஆயிரத்து 176 ரூபாவில் இருந்து ஆயிரத்து 65 ரூபாவாகவும் 870 ரூபாவில் இருந்து 765 ரூபாவாகவும் குறைக்கபபட்டுள்ளது.

அரசு உரவிலையைக் குறைப்புப் பற்றி குறிப்பிட்ட நிறுவனங்களுடன் பேச்சுக்கள் நடததியுள்ளது. உரத்தை மானிய விலையில் வழங்குவது தொடர்பாக சீனா, ஈரான், லிபியா ஆகிய நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஜுலை10

ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தினி அபினா மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை10

நீர்வேலி மேற்கு மாலை வைரவர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை 6மணிக்கு இடம்பெறும்.

பொங்கல் விழாவை முன்னிட்டு விசேட பூசைகளும், வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை10

யாழ். நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை10

அராலி வடக்கு, கோணாவில் பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

பொங்கல் விழாவைத் தொடர்ந்து மாகேஸ்வர பூசை இடம்பெறும். (10-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜுலை10

வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (10-201)

★ ★ ★

வவுனியா,ஜுலை10

வவுனியா, கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயிலின் அகிலாண்டேஸ்வரி அம்பாள் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (10-201)

★ ★ ★

காரைநகர்,ஜுலை10

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தின் வருடாந்த தேவி பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (10-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை10

நவாலி தேவர்கட்டு இருதயநாதர் தேவாலய வருடாந்த திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை10

சண்டிலிப்பாய் மாகியம்பதி ஸ்ரீதெல்லிதெட்சணகைலாயம் ஸ்ரீமனோன்மணி அம்பாள் (கருணாகடாட்சி அம்பிகை) உடனுறை கைலாயநாதர் சுவாமி மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 11நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 15 நாள்களும் தொடர்ந்து பெரியபுராணம் பற்றிய சமயச் சொற்பொழிவு நடைபெறும். (10-[illegible])

# இன்றைய ஆட்டங்கள

யாழ்ப்பாணம்,ஜுலை10

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

★மாலை 4.15மணி - யூனியன் வி.க. எதிர அரியாலை வி.க.

★மாலை 5.15 மணி சென். நீக்கலஸ் வி.க. எதிர் சென். அன்ரனிஸ் வி.க. (10-190)


## தென்மராட்சியில் கணக்காய்வுச் சேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட பிரபல பட்டயக் கணக்காய்வு நிறுவனத்தின் கிளை சாவகச்சேரியில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிறுவனத்தில் வருமானவரி, கணக்காய்வு நிதிக்கூட்டறிக்கை தயாரித்தல், உள்ளகக் கணக்காய்வு மற்றும் தினசரி கணக்குப்பதிவு வருமானவரி பற்றிய ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளலாம்.

*தொடர்பு கொள்ளவேண்டிய தற்போதைய முகவரி:*

எம்.எல்.விநோதன்,

(சி-36293) முருகன் கோயிலடி, பெரிய மாவடி, சாவகச்சேரி.


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இலகுநாதன்

(மண்கும்பான்)

மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இலகுநாதன் நேற்று (09.07.2004) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும் குலசேகரம்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியினரின் அருமை மருமகனும் உருக்குமணிதேவியின் அன்புக் கணவரும் விஜிதா, செந்தூரன், யதுஷன், வாகீசன் (யா/சரவண பவானந்தா வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் முத்துமாலை, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணபதிப்பிள்ளை (அருள் விநாயகர் மோட்டோர்ஸ்), விஜயகுமார், மகேஸ்வரி, சறோஜினிதேவி, ரஞ்சினிதேவி, சகுந்தலாதேவி, குமாரவதனன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*
(33964)(37-16-18-32)
திருமதி இ.உருக்குமணிதேவியும் பிள்ளைகளும்.

### திருமதி திருநாவுக்கரசு தவமணி



சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி திருநாவுக்கரசு தவமணி அவர்கள் நேற்று (09-07-2004) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*
(33970)(32-16-18)
தி.பஞ்சலிங்கம் (மகன்).

## வாழ்த்துகின்றோம்



### திரு. நாகராஜா நவரட்ணராஜா

(கிராம அலுவலர் அதியுயர் சிறப்புத் தரம்)

*பததிநாள் கூட்டங்களில் பாங்குடன் பல பேசி*
*மிகுதி நாள் பொழுதெல்லாம் பிரச்சினையுள் புரட்சி செய்து*

*விடைகாண முடியா விடயங்களிற்கெல்லாம் விடைதந்து*
*குடைபோல் இருந்தெல்லாம் கொலுசெய்த நண்பனே!*

*நல்லூரில் உன்சேவை நலிதல்ல சிறப்புதர சித்திபெற்று*
*யாழ். பிரதேசம் சென்றாலும் நீடூழி நின்சேவை நிலைபெறவே*
*வாழ்த்துகின்றோம்.*

(சி-36295)(33-18-16-32)
கிராம அலுவலர்கள்,
நல்லூர் பிரதேச செயலகம்.


## ஆசிரியர் போட்டிப்பரீட்சை

யாழ்நகர் வகுப்புகள்

க. தவசேகர் B.Sc.P.G.Dip.in.Ed.

சனி, ஞாயிறு 10.30 - 1.30 D.M.I.

புதன், வியாழன், வெள்ளி 3.30 - 6.30

Science Hall

★ மாதிரி வினாக்களின் தொகுப்பு சனி (10.07.2004) முதல் வகுப்புகளிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

(33978)

வாடிக்கையாளர் வசதி கருதி..!
1995 இற்கு முன் வெலிங்டன் சந்தியில் இயங்கிய....

மொறாயஸ்

பல்,மூக்குக் கண்ணாடியகம்

ஆஸ்பத்திரி வீதி, 546 ஆம் இலக்க கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

★ இலவச கண்.பரிசோதனையுடன் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள...

★ பல்கட்ட, மிதப்புப் பற்களுக்கு 'கிளிப்' பொருத்த

மொறாயஸ்

பல், மூக்குக் கண்ணாடியகம்

564, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இல.05, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-36294)(29)


## தவறிவிட்டது

நேற்று (09-07-2004) வெள்ளிக்கிழமை நெல்லியடியிலிருந்து நல்லூர் வந்த மினிபஸ்ஸில் பெறுமதி மிக்க பல பொருள்களுடன் கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

*பெண்கள் பண்பாட்டு மையம்,*
*439, கோயில் வீதி, நல்லூர்.* (33972)


## மீண்டும்

※ ஸ்கிறீன் பிறிண்டிங்

※ பொலிமர் இறபர் சீல் தயாரிப்பு

பயிற்சிநெறி ஆரம்பம்:

11.07.2004 காலை 10 மணி.

யசோ

35. கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம்.

(33967)

## அருள் கொமினிக்கேஷன்ஸ்

NET 2 PHONE டொலர்

GO 2 CALL டொலர்

CALLING CARD'S

விஷேட கட்டணத்தில் இன்று முதல்.....

79/=

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு 0777-631865, 222-3615.

★ 24 மணி நேரமும்

★ எந்தத் தொலைபேசியூடாகவும்

★ கட்டுபடியாகும் கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

06/=

குறிப்பு:- மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைச்சலுகை உண்டு.

இல.01,பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்.

222-3536

E-Mail - arulcom 2003 @ Yahoo.com

(33971)(43-18-16-32)



காரைநகர் புது வீதியில் "போரூட்" நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள தையல் பயிற்சி நிலையத்தின் ஆடைகள் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இக்கண்காட்சியின் ஆரம்ப விழாவில் முன்னாள் பிரதேச செயலர் வே.சாம்பசிவம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரன், போரூட் நிறுவன தீவகத்திட்ட இணைப்பாளர் மூர்த்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் சி.கங்காதரன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

# பட்டப்படிப்பை நிறைவு செய்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முகாமையாளர் ஆக வாய்ப்பு

சாவகச்சேரி,ஜூலை10

பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டு வருட சேவையினை நிறைவு செய்திருப்பின் சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாவின மித்திரத்தின.

கடந்த மாதம் 21ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள சமுர்த்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் தலைமையில நடைபெற்ற அகில இலங்கைச் சமுர்த்தி, விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினருடன் நடத்திய சந்திப்பிலேயே பணிப்பாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

சமுர்த்தி முகாமையாளர் பதவிகளுக்கு ஏற்பட்டுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு பட்டதாரிகளாக உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்தால் அதன் மூலம் அந்த வெற்றிடங்களை நிரப்பலாம் என்று தொழிற்சங்க இணைப்பாளர் மா.ஜெயமோகன் கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக் கொண்டே பணிப்பாளர் இந்த உறுதி மொழியினை வழங்கியுள்ளார்.

இதேவேளை இச்சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கும் சமுர்த்தி வங்கிகளுக்கு அதிகார சபையினரால் கட்டட வசதிக்கென வழங்கப்படும் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா போதாதுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பணிப்பாளர் சமுர்த்தி வங்கிகளுக்கு புதிய கட்டடங்களை யாழ்.மாவட்டத்தில் அமைக்க பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

(ஒ-13-31)

# யாழ். மாவட்டப் பயன்பாட்டுக்கு மூன்று அம்புலன்ஸ் வாகனங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.மாவட்டச் சுகாதார சேவைகள் பிரிவு வைத்தியசாலைகளின் பாவனைக்கென சுகாதார அமைச்சினால் மூன்று புதிய அம்புலன்ஸ் வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்ட இந்த அம்புலன்ஸ் வாகனங்கள் நேற்றுமுன்தினம் இரவு சுகாதார சேவைகள் பிரிவுப் பணிமனைக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன.

இம்மூன்று அம்புலன்ஸ் வாகனங்களும் வட்டுக்கோட்டை, காரைநகர், வேலணை வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளன என்று அறியப்படுகிறது.

(ஒ-15-117)

# மிருசுவில் நூல் நிலையம் மீண்டும் சொந்த இடத்தில்

தென்மராட்சி, ஜூலை 10

சாவகச்சேரிப் பிரதேச சபையின் மிருசுவில பொது நூல்நிலையக் கிளை நான்கு வருடங்களின் பின்னர் அதன் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

தற்போது உசனில் தனியார் வீடொன்றில் இயங்கிவரும் இந்த நூல் நிலையக்கிளை மிருசுவில் - உசன் சந்தியில் உள்ள சொந்தக் கட்டடத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் செயற்படவுள்ளது.

பொது நூல் நிலையக்கிளை சொந்த இடத்தில் இயங்கவுள்ளதை முன்னிட்டு நூலக அபிவிருத்திக்குழுவினர் நூலக வாரத்தினை எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் இங்கு கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

2000 ஆம் ஆண்டு நூல்நிலையக் கட்டடத்தில படையினர் நிலைகொண்டிருந்தனர். 2002 ஆம் ஆண்டில் ஏ-9 வீதி புனரமைப்பு பணியை முன்னிட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அலுவலகமாக இது இயங்கி வந்தது. அண்மையில இச் கட்டடம் நூலக அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டதையடுத்து நூல் நிலையக் கிளையினை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது..

(ஒ-117)

# விளையாட்டு விழாவில் புலிக்கொடி; கண்காணிப்புக்குழு விசாரணை

தென்மராட்சி,ஜூலை10

வரணிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற விளையாட்டு விழா ஒன்றில் புலிக்கொடி ஏற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம தொடர்பாக படையினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வரணி இளைஞர் கழகத்தினர் மின்னொளியில் நடத்தி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆரம்பத்தில் விளையாட்டு மைதானத்தில் புலிக்கொடி ஏற்றப்பட்டதாகப் படையினர் முறையிட்டுள்ளனர்.

இது யுத்த நிறுத்த மீறல் சம்பவம் என்றும அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## அர்ச்சகர் படுகாயம்!

யாழ்.,ஜூலை10

ஆலயத்தின் இராஜகோபுர கட்டப் பணிகளைப் பார்ப்பதற்காக சாரமரத்தில்ஏறிய ஆலய பூசகர் சார மரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்து தலையில் படுகாயமடைந்தார்.

பண்டத்தரிப்பு அம்மன் கோயிலில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆலய பூசகர் கந்தையா குருக்கள் சதாசிவக் குருக்கள் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)


## விற்பனைக்கு

ஒரு பலசரக்குக் கடை நடத்தக்கூடிய தளபாடங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மாணிக்கம் ராஜன்,
1010/28, தலையாழி லேன்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(33975)(36)


## காணவில்லை



மூளாயைச் சேர்ந்த திருமதி பாலசுப்பிரமணியம் பொன்னம்மா வயது 71 என்பவரை கடந்த 07.07.2004 புதன்கிழமை முதல் காணவில்லை. சற்று மனநிலை சரியில்லா இவர் இறுதியாக வெள்ளை நிற சாறி அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

பா.விமலகாந்தன்.
C/O - கிருஸ்ணபிள்ளை,
மூளாய்மேற்கு,
சுழிபுரம்.
T.P- 0712373433
(33982)(36)


## நாகம்ஸ் சுன்னாகம்



இன்னும் சில தினங்களில் நம் மாதவன், அமோகா, பூஜா, தாமு நடித்த ஜேஜே
தினசரி: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
12.07.2004 முதல்
துள்ளாத மனமும் துள்ளும்
(C/35739)(37)

## ராஜா யாழ்ப்பாணம்

அர்ஜுன், அபிராமி, மணிவண்ணன், பிரகாஸ்ராஜ் நடித்த
வர்ணஜாலம்
(ரீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,9.30 (பி.நே)
(C/35994)(37)

## நிறைஞ்சனாஸ் சங்கானை



விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
SHE [இரவு 8.45]
(C-35653)(37)

## தற்போது பரபரப்பான விற்பனையில்...

கம்ப்யூட்டர் டுடே
- மே 2004 இதழ் -
"தேசிய தமிழ் கணனிச் சஞ்சிகை"
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
(சி-36287)(30)
விநியோகப் பகுதி, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.


## பரதநாட்டிய அரங்கேற்றம்



யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் நியூஸிலாந்து ஒக்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட

திருதிருமதி மோகன்ராஜ் - ஜோதினி

தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரியும்

*யாழ்ப்பாணத்தில் முன்னர் பிரபல்ய நாட்டிய ஆசிரியராகத் திகழ்ந்த திருமதி விமலா யோகநாதன் அவர்களின் புதல்வி*

ஸ்ரீமதி ரேணுகா கேதீசன்(ரமா)

*அவர்களின் மாணவியுமான*



**செல்வி அமுதினி**

*அவர்களின்*

பரதநாட்டிய அரங்கேற்றம்



*பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.*

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம்: 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி.

♡♡♡ ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

- திரு-திருமதி மோகன்ராஜ் ஜோதினி தம்பதிகள்.

**16, Edrick place Drive Manarewa, Auck land, Newzaland.**

(33973)(36-11-16)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், இராசேந்திரா வீதியைச் சேர்ந்தவரும் எமது மைத்துனருமான

**சண்முகம் சிவப்பிரசாசம்** அவர்களின்

திடீர் மறைவையொட்டி மிகுந்த வேதனையடைவதுடன் அவரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (33983)(36-11-16)

செ.ஜெயரத்தினம் குடும்பம்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பூமணி



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பூமணி நேற்று (09.07.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நல்லம்மாவின் மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் ஞானசுந்தரம் (பிரான்ஸ்), குணசுந்தரம் (ஏழாலை), தேவசுந்தரம் (பிரான்ஸ்), தேவகுமாரி, ஜெயக்குமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணமணி, ஞானசிரோண்மணி, மகாலிங்கம், சுரேந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் தாஞ்சன், தனுஜா, தனுசன், தனேஜி, சுலக்சன், டிலக்சன், மேகலா, தர்சினி, சனார்த்தனன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உப்பு மடச் சந்தி,*
***K.K.S.** வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (33981)(11-16-36)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

### காணாமற்போனோர் குறித்த விசாரணை

# நீதிமன்றில் தவறாது சமுகமளிக்க இராணுவ அதிகாரிக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜுலை10

வடபகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் 16 பேரின்ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணையின் அடுத்த தவணையின் போது இராணுவ அதிகாரி டுமிந்த கெப்பற்றிக்பொல தவறாது ஆஜராக வேண்டும் என்று சாவகச்சேரி நீதிமன்றம் பணித்துள்ளது.

1996-97 காலப்பகுதியில் காணாமற்போனவர்களில் 16 பேரின் ஆட்கொணர்வு மனுக்கள் சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் பி.சுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது இந்த விசாரணை தொடர்பாக முதலாவது பிரதிவாதியான மேற்படி அதிகாரி 6 மாதகாலத்திற்கும் மேலாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கின்றார் என்பதனை நீதிமன்றம் கவனத்தில் எடுத்தது. சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் கைதடி-நாவற்குழி பிரதேச இராணுவ முகாமில் டுமிந்த கெப்பற்றிபொல பணியாற்றி வந்தவராவார். இவர்தற்போது பலாலி இராணுவ முகாமில் பணியாற்றிவருகின்றார் என்று வாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து விசாரணையை எதிர்வரும 20 திகதி ஒத்திவைத்த நீதிவான் அன்றைய தினம் பிரஸ்தாப இராணுவ அதிகாரி தவறாது நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். (எ)

# ஊடக வளங்கள் மையத்தில் உலகத்தரத் திரைப்படங்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் யுனெஸ்கோ அனுசரணையுடனும், டென்மார்க் அரசின் நிதியுதவியுடனும் நிறுவப்பட்டுள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நாளை உலகத்தரமுடைய 45 திரைப்படங்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

அகிரா குரசோவா, தர்கோவ்ஸ்கி, சார்லி சாப்ளின், பெலினி, த்ருபோ, பெர்க்மன், மஜீத்மஜிதி, ரிச்சட் அட்டன்பரோ, சத்யஜித்ரே, விக்டர் பிளமிங் ஆகிய புகழ்பெற்ற இயக்குநர்கள் உருவாக்கிய உன்னத திரைக்காவியங்களே இப்போது தருவிக்கப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர்களும், கலை இலக்கிய ஆர்வலர்களும், மாணவர்களும் இவ்வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுப்போட்டி

காரைநகர்,ஜுலை10

காரைநகர் பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நாளை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிதொடக்கம் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேசசபைச் செயலாளா கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-73)

## தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் பாணியிலேயே நடத்தப்பட்டிருக்கிறது என்றும் - எனவே புலிகள் வன்முறையைக் கைவிடவேண்டும் என்றும் அமெரிக்கா மீண்டும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து அரச தரப்பினருடன் மீண்டும் சமாதான முயற்சிகளைத் தொடங்கவேண்டும் எனவும் அமெரிக்காவின் அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (49)

## குழந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை எனத் தெரிந்து கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் கொம்பிக்குளம் பகுதிக்குச் சென்ற பொலீஸ் குழுவினர் அங்கு மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள், சுமார் 50 பவுண் நகைகள், ஒரு தொகைப்பணம், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

கைதானவர்களில் ஒருவர் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலீஸாரால் ஏற்கனவே தேடப்பட்டு வந்த கரவெட்டியைச் சேர்ந்த நபர் என்று தெரியவந்துள்ளது. இவர்களிடம் விசாரணை நடத்திய பொலீஸார் நேற்றுக்காலை மேலும் 5 பேரைக் கைதுசெய்தனர் என்று கூறப்படுகின்றது. (ஒ-70-117)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராமல் தடைப்பட்டுப் போயின. விவகாரம் கிடப்பில் போடப்பட்டது.

எனினும், இன்று நடைபெறும் மாகாண சபைத் தேர்தல்கள் முடிந்தகையோடு சமாதான முயற்சிகளை முன்நகர்த்தத் தூண்டும் வரையில் ஆக்கபூர்வமான - தீர்க்கமான - முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த இலங்கை அரசுத் தரப்பின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வருவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், அத்தகைய சூசக அறிகுறிகள் ஏதும் தென்படவேயில்லை என்று சமாதான முயற்சிகளில் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. மாறாக, திரைமறைவில் இடம்பெறும் காய் நகர்த்தல்கள், சம்பவங்கள், பதில் நடவடிக்கைகள் என்பன இரு தரப்பிற்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்குப் பதிலாக, முரண்பாடுகளைத் தீர்க்கமாக்கி, மோசமான கட்டத்தை நோக்கி நிலைவரத்தை நகர்த்தி வருகின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் எச்சரிக்கை வெளியிட்டன.

## மருத்துவபீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர் கலாநிதி குணராஜசிங்கம் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர் என்று நேற்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.

இதனையடுத்து மாணவி கி.புஷ்பமாலாவுக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதைதான் விரும்பவிலை என்றும் - அதேவேளை அமைக்கப்பட்டுள்ள குழுவின் ஊடாக சாதகமான முடிவைப்பெற அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும என்றும் - மாணவி அப்போது தெரிவித்தார்.

இதன் பின்னர் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்செல்வகுமார் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை 10 ஆம் திகதி (இன்று) முதல தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்தார். (ஒ)

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசாங்கம் அது ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நாள் முதல் தமிழர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது.

இந்த அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டு வந்த நிழல் யுத்தம் இப்பொழுது வெளிப்படையாகவே அம்பலத்திற்கு வந்துவிட்டது.

பொது இடங்களில் அடையாள அட்டையின்றிக் காணப்பட்ட தமிழ் இளைஞர்கள் காலவரையறையின்றி சிறையில் அடைக்கப்படுகின்றனர். ஆனால், ஹிங்குராகொடவில் பயங்கர ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட கருணா ஆதரவாளர்கள் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டனர்.

கருணாவின் ஆள்களை இராணுவக் கைக்கூலிகளாகப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புலிகளைச் சீற்றமடையச்செய்து அங்கே மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் படுகொலைகளுக்குப் பின்னணியில் இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர். மட்டக்களப்பு தமிழ் இளைஞர்களைச் சுட்டுவிட்டுத் தப்பியோடும் கைக்கூலிகளைக் கைது செய்யாமல் இராணுவத்தினரும், பொலீஸாரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் என நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

எனவே, கருணாவின் ஆதரவாளர்களை அரசும் இராணுவமும் தட்டிக் கொடுத்து வளர்க்கின்றன. இது சமாதான முன்னெடுப்புக்களுக்கும் - தமிழர்களின் அமைதி வாழ்க்கைக்கும் - பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இந்த அரசாங்கம் ஒரு போதும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க எந்த முயற்சியையும் எடுக்க முன்வருவதில்லை. தமிழ்பேசும் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப் போவதுமில்லை.

இதனை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ் அமரசிங்க வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடைந்தபின் நாடாளுமன்றம் கூடும் போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியேற்றப்படுவார்கள் எனக் கூறினார். இப்பொழுது ஜே.வி.பியினரின் சுயரூபம் வெளிப்பட்டு விட்டது.

நாடாளும்மன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் இந்த அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அனுமதிக்கமாட்டா.

தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்க வேண்டியநேரம் வந்துவிட்டது. எனவே, வடக்கு - கிழக்கு மலையகம் என்ற பேதமின்றி அனைவரும் இணைந்து புத்திசாலித்தனமாகச் செயற்படவேண்டும்.

- என்றார் மகேஸ்வரன் எம்.பி. (க)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழுவில் இடம்பெற்றுள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், திருகோணமலை சட்டத்தரணி சிவபாலன், செல்வி சிறி அருளானந்தன், திருமதி ந.மாலதி ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்தக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார், யாழ்.மருத்துவ பீடாதிபதி எஸ்.சிவபாலன் ஆகியோரும் அங்கம்பெறுகின்றனர்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவராஜா

(உரிமையாளர் - மல்லிகா மிக்சர் மாளிகை, யாழ்ப்பாணம் - மானிப்பாய்)



வேலணை, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராஜா அவர்கள் 07.07.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவிகாராணியின் பாசமிகு கணவரும் தெய்வீகராஜாவின் (சணா) அன்புத் தந்தையும் மாணிக்கராஜா (ஆஸ்திரேலியா), செல்வராணி, மல்லிகாதேவி, நவரட்ணராஜா (ஆஸ்திரேலியா), நித்தியலக்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமி (ஆஸ் திரேலியா), காலஞ்சென்ற குலசிங்கம் (குலம் கிறீம் ஹவுஸ்) மற்றும மனோகரன் (மல்லிகா ஸ்ரோஸ் - மானிப்பாய்), பிரான்சிஸ் (கனடா), இரத்தினஜோதி, இந்திரஜோதி (கொழும்பு), இராஜினிதேவி (கொழும்பு), ஆனந்தஜோதி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சறோஜினிதேவி, கிருபாதேவி, இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் முகுந்தராஜா, மோகனராஜா, பிரிதிவராஜா, மைதிலி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் மோகனபிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி, லக்சி, துளசி, ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப், சாலினி ஆகியோரின் பாசமிகு குட்டி அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2004) ஞாயிற்றுக் கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லிகா மிக்சர் தொழிலகம்*
*கூளாவடி, ஆனைக்கோட்டை.* (33939)(40-11-12)

தகவல்:
- குடும்பத்தினர்.

NEW SCIENCE COLLEGE JAFFNA
புலங்கள்
Mon.,Wed. 5.30
ஆரம்பம்: 12-07-2004
ஒளியியல் (ஒளி முறிவு)
Sat., Sun. 6.00
ஆரம்பம்: 10-07-2004
பொறியியல் (சுழற்சி இயக்கம்)
Tue.,Thu.-6.00
ஆரம்பம்: 13-07-2004
by: கருணாநிதி
(33954)

NEW SCIENCE ACADEMY
(கந்தன் கருணை நல்லூர்)
DAY CLASS
(Combined Maths)
★ அலகு ரீதியான துரித மீட்டல்
★ Model Paper
★ வாரந்த பரீட்சை
Mon.,Fri. (10.30 - 12.30)
A/L 2005
சிக்கல் எண்கள் / வட்ட இயக்கம் } Tue.,Thu. 5-7 p.m.
By: M.Rajan
(33957)(29-11-16)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

CHARTERED FOUNDATION & INTERMEDIATE
JANUARY 2005
aat-STAGE 11 DECEMBER 2004
50% கட்டணக் கழிவு
இச் சலுகை 22 JULY 2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது
24.07.2004 இல் விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
உடன்பதிவுகளுக்கு
IPAS
199, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பிறிமியர் பேக்கரி மேல்மாடி)
0777-563294, 563292
அலுவலக நேரம்:
திங்கள், வெள்ளி, தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 9.00 பி.ப. 1 மணிவரை
(C/36265)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தில் தமிழ்ப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பிக்கும்
திரு. பெரிய ஐங்கரன்
(பாலபண்டிதர்) ஆசிரியர்
அவர்கள் இன்று தமது கவி ஆற்றலை வெளிப்படுத்தும் முகமாக "எனக்கு மரணம் இல்லை" என்னும் நூலை வெளியிடுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அவர் மேலும் பல ஆக்கங்களை வெளியிடுவதற்கு இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்.
நந்தன் அக்கடமி,சாவகச்சேரி
கொடிகாமம். (சி-36110)(34-11-16)
எட்டநினைக்கும் சாதனையின் சிகரம்

போட்டிப் பரீட்சை
ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புக்கள்.
புதிய பிரிவு ஆரம்பம்: 12.07.2004 காலை 8.00 மணி.
எமது வழமையான ஆசிரியர்.
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
(33960)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புக்கள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தல்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665 OFTRINGEN, SWISS.
(33927)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L - 2006 (பொருளியல்) (விலைக் கோட்பாடு)
K.உதயன்
சனி, ஞாயிறு - 3 மணி. (33951)

324, Palaly Road, Jaffna.
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
1st Semester
New Batches Commence on
Weekend: 10th July at 10.00 a.m
Weekday: 15th July at 04.30 p.m
தெரிவுப்பரீட்சை முடிவுகளை எமது நிறுவனத்தில் பார்வையிடலாம்
Supported by UNDP/JRRP

புதிய பிரிவு ஆரம்பம்
Ms Office 17.07.2004
SKY COMPUTERS (PVT) LTD
No. 89, Kandy Road, Chundukuli, Jaffna. (Near Kachcheri)
(C/36216)(30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.